# மட்/பட்/களுதாவளை மகாவித்தியாலயம்

## தேசிய பாடசாலை



# சாதனையாளர் பாராட்டு விழா-2023

## சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/பட்/களுதாவளை மகாவித்தியாலயம்

## தேசிய பாடசாலை

# சாதனையாளர்
# பாராட்டுவிழா - 2023





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

பல்லவி

வித்தியாலயம் பொலிக பொலிகவே
ஸ்ரீ கணேசர் அருளுடன் மா

(வித்தி)

அனுபல்லவி

பக்தி மோனம் பரமெய்ஞானம்
சத்திய போதம் நித்தியம் நிலவி

(வித்தி)

சரணம்

கல்வி அறிவு செல்வம் ஓங்கி
களுதாவளையூர் புகழில் தோங்க
சொல்லும் செயலும் கடந்த சோதி
தூய பாத மலர்கள் தாங்கி

(வித்தி)

சமய வாழ்வு தமிழ்ப் பண்பாடு
அமை விஞ்ஞான அறிவினோடு
நமது தேவை நாமே தேடும்
நல்மெய்ஞான ஒளியை நாடி

(வித்தி)

இயற்றியவர்

பண்டிதர் வி .சீ. கந்தையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம அதிதி அவர்களின்
# வாழ்த்துச்செய்தி

மட்/பட்/களுதாவளை மகாவித்தியாலய தேசிய பாடசாலை சாதனையாளர் பாராட்டுவிழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கிழக்கு மாகாணத்தில் தனக்கென ஒரு தனித்துவத்தைக் கொண்ட களுதாவளை கிராமமானது கல்வி, விளையாட்டு, கலை, விவசாயம், ஆன்மீகம் என பல்வேறு துறைகளில் பங்களிப்புச்செய்வதில் இப்பாடசாலையின் செயற்பாடு இன்றியமையாத ஒன்றாகும். பல கல்விமான்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் இப்பாடசாலை, சாதனைபடைத்த மாணவர்களை கௌரவிக்கும் இந்தநிகழ்வில் நான் பிரதம அதிதியாக கலந்து கொள்வதையிட்டு உவகையடைகிறேன்.

இன்றைய சாதனையாளர் பாராட்டுவிழாவில் தேசியமட்ட மற்றும் மாகாணமட்ட இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளிலும் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளிலும் சிறந்த அடைவுகளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படுவதையிட்டு மாகாணக் கல்விப்பணிப்பாளர் என்றவகையில் பாடசாலைச் சமூகத்திற்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதிலும் குறிப்பாக இறுதியாக வெளியிடப்பட்ட உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் 51 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டிருப்பது இப்பாடசாலையின் கலைத்திட்டச் செயற்பாட்டின் வெற்றியை பறைசாற்றுகின்றது.பட்டிருப்பு கல்விவலயத்தில் அதிககூடிய மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பாடசாலையாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 5வது பாடசாலையாகவும் திகழ்வதையிட்டு இப்பாடாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்திற்கு எனது பாராட்டுக்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுப் போட்டிகளில் கிழக்கு மாகாணத்தில் முதல்நிலை பாடசாலையாக இப்பாடசாலை திகழ்வதோடு, இவ்வருடம் தேசிய ரீதியாக இரு பதக்கங்களை எமது மாகாணத்துக்கு பெற்றுத்தந்த ஒரே பாடசாலையாகவும், கிழக்கு மாகாணத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றுத்தந்த ஒரு பாடசாலையாகவும் திகழ்வது விளையாட்டுத் துறையில் இப்பாடசாலையின் முன்னிலையை பறைசாற்றுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமன்றி தேசிய ரீதியாக நடைபெற்ற அழகியல் போட்டியில் மூன்று முதலிடங்களை பெற்றதோடு தமிழ் மொழித்தினப்போட்டியில் ஒரு மாணவி தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றிருப்பதும் சகல துறைகளிலும் இப்பாடசாலை முன்னிலைபெற்று மிளிர்வதைக் காட்டுகிறது.

எமது மாகாணத்தில் இவ்வாறான பல்வேறு சாதனைகளை நிகழ்த்தும் இப்பாடசாலை எதிர்காலத்திலும் பல்வேறு துறைகளில் வெற்றியீட்டவும், சாதனைகளைப் படைக்கவும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அகிலா கனகசூரியம்**
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
கிழக்கு மாகாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களின்
# வாழ்த்துச்செய்தி

மட்டக்களப்பு மாவட்டத்தின் பழம்பெரும் பாரம்பரியத்தின் அடிநாதமாய் நின்று ஒழுக்கம், விழுமியம், அறம் சார் பண்புகளைக் கொண்டு காலத்தின் தேவைக்கேற்றவாறு விஞ்ஞான உலகை வெல்லக் கூடிய பல திறமைசாலிகளை உருவாக்கி வருகின்ற பட்டிருப்புக்கல்வி வலயத்தின் முன்னணிப் பாடசாலையான மட்/பட்/களுதாவளை மகா வித்தியாலயத்தின் (தேசிய பாடசாலை) வருடாந்த பரிசளிப்பு விழாவில் பரிசுபெறும் மாணவர்கள் அனைவரையும் மனமாரப்பாரட்டி மகிழ்கின்றேன்.

பொதுவாக வெற்றியாளர்களெல்லாம் தாம் செய்வதை வித்தியாசமாகச் சிந்தித்துச் செய்கிறார்கள். அதனால்தான் அவர்கள் வெற்றியாளர்களின் பட்டியலில் இடம்பிடித்துக்கொள்கின்றார்கள். எனவே வெற்றிகள் என்பது இலகுவானவையல்ல. அதற்காகத்தோல்விகள் என்பது முடிவும் அல்ல. வெற்றிகள் புரிந்த அத்தனை மாணவர்களையும் பயிற்றுவித்து சாதனையாளர்கள் எனக்கண்டு மகிழும், அதிபரும் பிரதி அதிபர்களும், ஆசிரியர்களும் உண்மையில் அதிசிறந்த சாதனையாளர்களே! அப்பேர்ப்பட்ட அதிசிறந்த சாதனையாளர்களைக் கல்வியுலகு ஒரு பொழுதும் மறக்காது. எனவே இம்மாணவர்களின் வெற்றிகளுக்குப் பின்னால் இருந்த துறை சார் ஆசிரியர்கள், உதவி அதிபர்கள், பிரதி அதிபர்கள், அதிபர், பெற்றார் அனைவருக்கும் எனது பாரட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

கடந்த 2019 முதல் 2021 ஆகிய ஆண்டுகளில் பாடவிதான மற்றும் இணைப்பாடவிதானங்களில் அபரிமிதமதான சாதனை புரிந்த மாணவர்களைப் பாராட்டுகின்ற இந்நிகழ்வு செவ்வனே நிறைவேற இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

இக்கல்லூரி கடந்த பத்தாண்டு காலத்தில் அதிக வெற்றிப் பதக்கங்களைக் குவித்து சாதித்திருப்பதாக அறியமுடிகின்றது. எனவே “எழுமின்! விழுமின்! குறிசாரும் வரை நில்லாது உழைமின்!” எனக் கூறிய சுவாமி விவேகானந்தரின் தாரக மந்திரத்தை மனதில் கொண்டு செயற்பட்டு கடந்த காலங்களை விட எதிர்வரும் காலங்களிலும் மட்/பட்/களுதாவளை மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) இன்னும் பலசாதனைகள் படைக்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**சிவானந்தம் சிறீதரன்** (இ.க.நி.சே–I)
வலயக்கல்விப்பணிப்பாளர் - பட்டிருப்பு கல்வி வலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் அறிக்கை

ஒன்றரை நூற்றாண்டு வரலாறுகொண்ட இவ்வித்தியாலயத்தின் ஒரு அதிபராகும் வாய்பபை எனக்குத்தந்த இறைவனுக்கு முதற்கண் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். எனது கல்விப்பணி 1998 ஆம் ஆண்டு முதல் ஆரம்பமானது. இதில் களுதாவளை மகா வித்தியாலயத்தில் 2009 ஆம் ஆண்டு முதல் அரசியல் விஞ்ஞான பாடத்தை கற்பித்தலுடன் ஆரம்பமானது. அப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை, இலங்கை அதிபர் சேவைக்குரிய போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று நியமனத்தை பொறுப்பேற்றும் இதே பாடசாலையில் நிருவாகப் பணியை விட ஆசிரியர் பணி சிறந்தது என்ற அடிப்படையில் கற்பித்தபோதே வலயக் கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய மட்/பட்/குறுமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டு, 2012ல் இருந்து கடமையாற்றிக் கொண்டிருந்தபோது களுதாவளை சமூகம் என்னை இப்பாடசாலையின் அதிபராக தெரிவுக்காக விண்ணப்பிக்கும்படி கோரியது. இக்கிராமத்திற்கு இன்னொரு சேவைசெய்ய மற்றுமொரு சந்தர்ப்பம் அமைந்தது. என்னை இச்சமூகம் தெரிவுசெய்ய பிரதான காரணம் எனது நூற்றுக்கணக்கான மாணவர்களின் சிபாரிசும் என்னுடன் கற்பித்த ஆசிரியர்களும்தான் என்பதை ஊகித்தேன். அதன் பின்பே விண்ணப்பித்து நேர்முக தேர்வின் பின்னர் 2019.02.08 இல் இப்பாடசாலையில் அதிபராக கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டேன்

இப்பாடசாலை 1AB பாடசாலை ஆகும். இங்கு தரம் 6 தொடக்கம் 13 வரை உள்ளது. இக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களை பெரும்பாலும் கொண்டிருந்தாலும், சுமார் 33 க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர். இதன்படி என்னுடன் 02 பிரதி அதிபர்கள், 87 ஆசிரியர்கள், 04 கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் 1326 மாணவர்களுடன் இப்பாடசாலை இயங்குகின்றது. நான் பொறுப்பேற்ற ஆரம்ப காலங்களில் பெரிய அளவு மாற்றங்கள் செய்யாது படிப்படியாக மாற்றங்களை ஏற்படுத்தினேன். இருந்தபோதும், நான் பொறுப்பேற்ற காலம் முதல் மிகப்பெரிய சவாலான காலமாக இருந்தது. ஈஸ்ரர் குண்டுவெடிப்பு தாக்குதலும் பாடசாலை விடுமுறையும் அதனைத் தொடர்ந்து கொவிட்-19 பெரும் தொற்றும், பின்னர் பாடசாலை விடுமுறையும் தொடர்ந்தும் தற்போதுவரை நாட்டின் பொருளாதார வீழ்ச்சி என இப்பெரிய சவால்களால் பாடசாலைகள் கணிசமான காலம் மூடப்பட்டு நாடும் முடக்கப்பட்டது. ஆனாலும் எமது பாடசாலையின் பிரதி அதிபர்கள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆலயங்களின் நிர்வாக சபையினர் வலய கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகள் மற்றும் ஏனைய பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடனும் எனது தலைமைத்துவத்தின் கீழ் சவால்களை எதிர்நோக்கி வெற்றிகண்டோம்.

அதிலும் covid-19 கால விடுமுறையில் எவ்வித பயிற்சியுமின்றி இருந்த ஆசிரியர்கள் Zoom, Whats App போன்ற நவீன தொழில் நுட்பத்தினூடாக கற்பிக்க பழகிக்கொண்டனர். இணையவசதி இல்லாதவர்களுக்கு வன்பிரதிகள் வழங்கப்பட்டன. இதற்கு பெற்றோரின் உதவி கிடைத்ததாலும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஆசிரியர்களின் உதவியுடன் கல்விப்பணியைத் தொடர்கிறோம்.

எனது காலப்பகுதியிலே இப்பாடசாலையின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு நிகழ்வாக இப்பாடசாலை ஒரு தேசிய பாடசாலையாக 2019.03.01 இல் மத்திய கல்வி அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டது. தேசிய பாடசாலையாக மாறுவதற்கு எமக்கு தனது பூரண அதிகாரத்தை பயன்படுத்தி உதவிய அப்போதைய கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ. திருமதி. விஜயகலா மகேஸ்வரன் அம்மணியையேசாரும். இதற்குப் பின்புலமாக செயற்பட்ட பாடசாலையின் பழையமாணவர்களும் கிராம மக்களுமே ஆகும்

ஒரு தேசிய பாடசாலையாக தரம் உயர்ந்தாலும் அதற்குரிய பௌதீக வளம், மனித வளம் என்பன எமக்கு இன்று வரை கிடைக்கப்பெறவில்லை. இருந்த வளங்களை கொண்டு உச்ச பயனை பெற்றுக்கொள்கின்றோம். குறிப்பாக வகுப்பறை தட்டுப்பாடும் பெரும் சவாலாக உள்ளது. இதைவிட தளபாடப் பற்றாக்குறை நிலவியபோது, எமது பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் பங்களிப்போடு எமது பாடசாலை அபிவிருத்தி சங்கத்தால் எனது காலப்பகுதியில் 400 தளபாடங்கள் திருத்தப்பட்டுள்ளது. இதைவிட பாடசாலையின் முன்பக்க மதிலில் ஒரு பகுதி மாகாண கல்வி திணைக்களத்தின் நிதிப் பங்களிப்புடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, இன்னுமொரு நுழைவாயிலும் திறக்கப்பட்டது. அத்தோடு வகுப்பறைத் தேவையைப் பூர்த்தி செய்ய அப்போதைய தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சினால் 18 வகுப்பறைகளைக் கொண்ட மூன்று மாடி கட்டடம் ஒன்றை 2019 இல் பெற்று அடிக்கல் நாட்டப்பட்டு ஒப்பந்ததாரரின் தாமதத்தால் அந்நிதி மீள அனுப்பப்பட்டு ஒரு தளத்தினையும் பூர்த்தி செய்யாத குறைபாடுகளுடன் அக்கட்டிடம் காணப்பட்டபோது, பழைய மாணவர்களின் முயற்சியால் அதனை மீண்டும் உயிர்ப்பிக்க எடுத்த முயற்சியால் 12 வகுப்பறைகள் கொண்ட இருமாடிகளாக குறைக்கப்பட்டு வேலைகள் நடைபெற்ற போது, நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் தாமதமான அவ்வேலை மெல்ல மெல்ல இன்று வரை நகர்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் பழைய மாணவர்களின் உதவியுடன் இயற்கையுடன் அமைந்த வெளியக வகுப்பறை, நீர் வழிந்தோடுவதற்கான கால்வாய் அமைப்பு மற்றும் ஒன்றுகூடல் மண்டபத்தைச் சுற்றி மண் நிரப்பி செப்பனிடல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதேபோல் கல்வி சாரா ஊழியர்கள் இப் பாடசாலையில் அண்ணளவாக சுமார் 24 பேர் தேவையான போதிலும் வெறும் இரு சேவை உதவியாளர்களும் ஒரு தற்காலிக முகாமைத்துவ உதவியாளருமே உள்ளனர். ஐந்தரை ஏக்கரில் விசாலமாக அமைந்துள்ள பாடசாலைக்கு காவலாளிகள் எவரும் இல்லாத ஒரு நிலை இருந்து வருகிறது. இந்த இடத்தில் எமது ஆசிரியர்களை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். ஏனெனில் கல்வி சாரா ஆளணியினரின் சேவைகளையும், நானும் எனது பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இங்கு கடமை ஆற்றும் சேவை உதவியாளர்களுமே மேற்கொள்கின்றோம்.

குறைபாடுகளுடன் இருந்தாலும் இலங்கையில் உள்ள தேசிய பாடசாலைகளுடன் சரிசமமாக போட்டியிட்டு எல்லோரையும் ஆச்சரியத்துடன் திரும்பி பார்க்கவைக்கும் பல சாதனைகளை எமது பாடசாலை சாதித்துக் கொண்டு வருவதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். நான் அதிபராக பொறுப்பேற்ற காலமான 2019 இல் இருந்து நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மற்றும் சவால்களுக்கும் மத்தியில் மாணவர்களின் வீடு வீடாக சென்று கல்விப் பணியாற்றியிருந்ததோடு, எல்லோரின் ஒத்துழைப்புடன் பாடவிதானத்திலும், இணைப்பாட விதானத்திலும் பெரும் சாதனைகளை படைத்தோம். பாடவிதானத்தில் க.பொத சாதாரண தரத்தில் சித்தி பெற்று உயர் கல்வி கற்கும் மாணவர் எண்ணிக்கை முறையே 2018 இல் 76.23% இல் இருந்ததைவிட 2021 இல் 86.71% ஆக அதிகரித்துக் கொண்டு வருகிறது. அது மாத்திரமல்லாமல் இப்பாடசாலை வரலாற்றில் 2021இல் அதிகளவான மாணவர்கள் க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்றியதும் 06 மாணவர்கள் 9A பெற்றதும், சித்தி வீதம் உயர்ந்ததையும் குறிப்பிடலாம்.

அதுபோல க.பொ.த உயர்தர பரீட்சையை பொறுத்தவரை 2018 இல் 75% ஆகவிருந்த சித்தி வீதம் 2021 இல் 76.56% ஆக அதிகரித்ததோடு, பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பொறுத்தவரை அதன் மொத்த தொகை 20 தொடக்கம் 40 வரை காணப்பட்டதை முதல்முறையாக அரைச் சதத்தினைக் கடந்தது. 2021ல் இதுவரை 51 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு இத் தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இத்தரவுகளின் அடிப்படையில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் அதிக மாணவர்களை பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பிய பாடசாலையாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்தாவது பாடசாலையாகவும் காணப்படுகின்றது.

அதிலும் குறிப்பாக 2020 உயர்தர பெறுபேற்றில் இப் பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக செல்வன். சற்குணம் கிஷாந்த் என்ற மாணவன் 3A சித்தி பெற்று மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். (மாவட்ட நிலை 16.) அதுபோல ஒவ்வொரு ஆண்டும் தொழில்நுட்ப துறையில் இருந்து மாவட்ட நிலையில் முதல் 10 இடங்களில் பெருமளவு மாணவர்கள் இப் பாடசாலையில் இருந்தே தெரிவு செய்யப்படுகின்றனர். அதுபோல 2021ல் க.பொ.த உயர்தர பரீட்சையில் இப்பாடசாலை மாணவி செல்வி. த. மிருணா கணித பிரிவில் 3A சித்தி பெற்று மாவட்டத்தில் மூன்றாம் நிலையில் பொறியியல் பீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்டார். அத்தோடு தொழில்நுட்ப பிரிவில் 2019 இல் செல்வன் கே.ரஞ்சன் மாவட்டத்தில் 2ம் நிலையினையும் 2020இல் செல்வன்.எம்.விஜீவன் 1ஆம் நிலையினையும் செல்வன்.ஜெ.கினுசன் 2ம் நிலையினையும், செல்வி. எஸ். விஜிதா 3ம் நிலையினையும், 2021 இல் செல்வி. ச. திஹாசினி ஆகியோர் மாவட்டமட்டத்தில் 2ஆம் நிலையினையும் பெற்றுக்கொண்டார். இச்சாதனைகளை படைக்க எமது ஆசிரியர்களின் பங்களிப்பு மகத்தானது. அத்துடன் வலயக் கல்வி அலுவலகம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழையமாணவர் சங்கம், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் இக்கிராமத்தின் உறவுகள், ஆலய பரிபாலன சபையினர் மற்றும் மன்றங்கள், சங்கங்களின் ஆகியோரின் ஒத்துழைப்பும் இன்றியமையாத ஒன்றாகும்.

பாடவிதானத்தோடு மட்டும் சாதனைகள் நின்றுவிடவில்லை. ஒவ்வொரு துறையிலும் எமது மாணவர்கள் சாதனைகளை படைத்துக் கொண்டிருக்கின்றனர். அந்த வகையில் விளையாட்டை பொறுத்தவரை தொடர்ச்சியாக சாதனைகள் படைக்கப்பட்டு வருகின்றன. அதிலும் நான் அதிபராக பொறுப்பேற்ற ஆண்டாகிய 2019 இல் எமது மாணவர்கள் இப் பாடசாலைக்கு மட்டுமல்ல எமது வலய, மாவட்டங்களுக்கும் பெருமை சேர்த்து வருகின்றனர். அந்த வகையில் மாகாண மட்ட விளையாட்டு போட்டியில் 2019 இல் 13 தங்கமும் 11 வெள்ளியும் 10 வெண்கலமும் பெற்றதோடு, பட்டிருப்பு கல்வி வலயம் 179 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடம்பெறுவதற்கு தனியொரு பாடசாலையாக எமது மாணவர்கள் 127 புள்ளிகளை பெற்றுக் கொடுத்து சாதனை நிலைநாட்டிய அதேவேளை தேசிய ரீதியாகவும் மாணவர்கள் பங்குபற்றினர். அதன்பின் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தாதிருக்க கல்வி அமைச்சு தீர்மானித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இவ்வருடம் 2022ல் நாங்கள் இந்த சவால்களுக்குள் முடங்கிவிடவில்லை என்பது போல மீண்டும் சாதனை பக்கங்களில் பதியப்பட்டனர். அந்தவகையில் இம்முறை கிழக்கு மாகாண மட்டத்தில் புதிய சாதனைகளை எமது மாணவர்கள் ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், கிழக்குமாகாண விளையாட்டுப் போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று மாகாணத்தில் முதலாவது இடத்தைப்பெற்று எமது பாடசாலை சாதித்தது. இந்தச்சாதனை எமது வலயம் முதலாமிடம்பெற காரணமானது. இதில் முக்கியமான மற்றுமொரு விடயம் 11 விளையாட்டுகளில் எமது மாணவர்கள் மாகாணச் சாதனையை முறியடித்து புதிய சாதனைகளை படைத்துள்ளனர். அத்தோடு நீண்ட கால இடைவெளிக்குப்பின் எமது கூடை பந்தாட்ட அணியினர் மாகாணத்தில் மூன்றாமிடம் பெற்று தேசிய ரீதியாக விளையாட தகுதிபெற்றனர். அந்தவகையில் இம்முறை தங்கம்-15, வெள்ளி-09, வெண்கலம்-08 பதக்கங்களுடன் வெற்றிவாகை சூடினர். சாதனைகள் அத்துடன் நின்றுவிடவில்லை. அது தேசியரீதியாகவும் வெளிவந்தது. இம்முறை தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தலில் இரண்டு மாணவர்கள் மூன்றாமிடத்தைப்பெற்று வெண்கல பதக்கங்களை சுவீகரித்தனர். அதில் செல்வன். தி.டிலுக்சன் (20 வயது பிரிவு) மூன்றாம் இடம், செல்வன்.மே.கதுஷ்கர் (18 வயது பிரிவு) மூன்றாம் இடத்தினையும் பெற்று சாதித்தனர். அது மட்டுமின்றி இரண்டு மாணவர்கள் தேசிய ரீதியாக நான்காம், ஆறாம் இடங்களை பெற்றனர்

இந்த விளையாட்டு சாதனைக்கு தமது அத்தனை சக்திகளையும் பயன்படுத்தி உழைத்தவர்கள் எமது பாடசாலை உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், பழைய மாணவர் சங்கம், ஏனைய ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இக்கிராமத்தின் உறவுகளும் உள்நாட்டில் வாழும் இக்கிராமத்தின் உறவுகளும் ஆலய பரிபாலன சபையினருமேயாகும்.

இது மட்டுமல்லாமல் ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பல சாதனைகளை எமது மாணவர்கள் படைத்துள்ளனர். அகில இலங்கை தமிழ்மொழித்தின போட்டி மாகாண ரீதியாக 2022 இல் ஒரு முதலாம் இடமும், ஒரு .இரண்டாம் இடமும் பெற்றதோடு தேசிய ரீதியாக நடைபெற்ற தேசியமட்ட குறுநாடக ஆக்கப் போட்டியில் செல்வி. உ. சநாதனி முதலாம் இடத்தை பெற்று தங்கப் பதக்கத்தினையும் பெற்றுக்கொண்டார். இதற்கும் எமது தமிழ் பாட, அழகியல் பாட ஆசிரியர்களும் வலயக் கல்வி அலுவலகம், பாடசாலை சமூகமும் பக்கபலமாக இருந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சமூக விஞ்ஞான போட்டியில் 2019 இல் ஒரு முதலாம் இடமும் ஒரு 3ம் இடமும் கிடைத்தது. 2022 மாகாண மட்டத்தில் ஒரு மாணவர் முதலாம் இடத்தைப் பெற்றதோடு தேசிய ரீதியாக அவர் பங்குபற்றிய முடிவுகள் இதுவரை வெளியாகவில்லை. தேசிய ரீதியாக ஒரு மாணவன் பங்கு பற்றிய போதும் முடிவுகள் இதுவரை வெளியாகவில்லை. இதிலும் எமது சமூக விஞ்ஞான பாட ஆசிரியர்களும் வலய கல்வி அலுவலகம், பாடசாலை சமூகமும் பங்களிப்பை வழங்கினர்.

மேலும் நீண்ட நாட்களின் பின்னர் நடைபெற்ற கல்வி அமைச்சின் அழகியல் பிரிவால் நடத்தப்பட்ட போட்டிகளில் நடனப் போட்டியில் மாகாண மட்டத்தில் ஒயிலாட்டம் உழவர் நடனம், செம்பு நடனம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றி மூன்றிலும் முதலாம் இடத்தை பெற்றதோடு தேசிய மட்டப் போட்டியிலும் இம் மூன்று நிகழ்வுகளிலும் முதலாம் இடத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர். இப்போட்டி முடிவுகளும் எமது பாடசாலையின் நடன ஆசிரியர்கள் மற்றும் சங்கீத ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர்களையும் சாரும்

எல்லாவற்றுக்கும் மேலாக எமது மாணவர்கள் பங்குபற்றும் அனைத்து இணைப்பாடவிதான போட்டிகளிலும் வலயமட்டத்திலிருந்து ஆரம்பித்து தேசிய மட்டம் வரை பங்குபற்றி முழு ஆளுமையுடன் தமது திறமைகளைக்காட்டும் மாணவர்கள் இப்பாடசாலையில் சொத்தாக மிளிர்கின்றனர்.

ஒவ்வொரு மாகாண தேசிய மட்ட போட்டிகளிலும் வெற்றிபெற்று வரும் மாணவர்களையும் அதிபர் ஆசிரியர்களையும் இப்பாடசாலை சமூகம் நள்ளிரவு ஆனாலும்கூட பாடசாலை அடைந்ததும் வரவேற்று உபசரித்து பாராட்டி வாழ்த்தாமல் சென்றதில்லை. இது இன்னும் சாதனை படைக்க ஊக்கத்தை தருகின்றது. இவ்வருடம் தேசியரீதியாக இணைப் பாடவிதானங்களில் 31 மாணவர்கள் பதக்கங்களும் சான்றிதழ்களும் பெற்றுள்ளனர் என்பதையிட்டு பெருமிதமடைகின்றேன்.

இறுதியாக பாடவிதானம் மற்றும் இணைப்பாட விதானங்களில் வருட ஆரம்பத்திலிருந்து சாதனைகள் நிலைநாட்டப்பட்டாலும் நாட்டின் அசாதாரண நிலமை காரணமாக போட்டிகள் வருட இறுதிவரை நடைபெற்றதால் அவ்வப்போது மாணவர்களை பாராட்ட முடியாதவொரு நிலையேற்பட்டது. கடந்தவருட இறுதி நாள்வரை போட்டிகள் நடைபெற்றது. எனவே, அனைவரையும் இணைத்து இவ்விழாவை நடாத்தவேண்டிய தார்மீகப் பொறுப்பு என்னிடமிருந்தது. இதனாலேயே இத்தினத்தில் இந்நிகழ்வு இடம்பெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், எமது வெற்றிப் பயணம் அடுத்துவரும் ஆண்டுகளிலும் தொடரும் என்று கூறிக் கொள்வதோடு, எமக்குத் தந்துகொண்டிருக்கும் ஒத்துழைப்புகளையும் ஊக்குவிப்புகளையும், பங்களிப்புகளையும் தொடர்ந்தும் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் இன்றைய பரிசளிப்பு விழாவிற்காக அனைவரையும் அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பை நல்கிய அனைவருக்கும் இந்நிறுவனத்தின் தலைவர் என்ற ரீதியில் மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. க. சத்தியமோகன்
அதிபர் - களுதவளை மகாவித்தியாலயம் (தேசிய பாடசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் வரலாறு

கிழக்கு மாகாணத்தில் மீன்பாடும் தேன் நாடு என்று சிறப்பித்துக் கூறப்படும் மட்டக்களப்பிலே, மட்டுமாநகரிலிருந்து கல்முனை செல்லும் பிரதான வீதியில் 23 கிலோ மீற்றர் தொலைவில் நெய்தலும், மருதமும் ஒருங்கே அமையப்பெற்ற பழம்பெரும் கிராமமாக, களுதாவளைக் கிராமம் அமைந்துள்ளது. இயற்கை எழில்கொஞ்சும் களுதாவளையில் அருள் நல்கும் சுயம்புலிங்கப் பிள்ளையார் பாடசாலையின் வடமேற்கு மூலையிலும், திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் கிராமத்தின் தென்கிழக்கு மூலையிலும் அமர்ந்திருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றனர்.

களுதாவளைக் கிராமத்தில் மக்களுக்கு அறிவைப் போதிப்பதற்காக ஒரு திண்ணைப்பள்ளிக்கூடம் முன்னாளில் இருந்தது. இது தற்போதுள்ள தேவாலய வீதி சந்திக்கும் பிரதான வீதியில் தெற்குப் பக்கமாக அமைந்திருந்தது. குருசீட பாரம்பரியமான பனையேட்டில் எண், இலக்கணம் மற்றும் புராண இதிகாசங்களையும் இலக்கியங்களையும் இங்கு கற்றனர். எண்ணெய்ச்சிந்து பாடினர் என அறியக்கூடியதாக உள்ளது. எனவே தான் மிஷனரிமார் களுதாவளையில் தெற்குப் பகுதியில் ஒரு குறித்த சமூகத்திற்காக முதன்முதலாக ஒரு சிறிய பாடசாலை 1869 ஆம் ஆண்டு அமைத்தனர். இது மெதடிஸ்த மூப்பன் பாடசாலை என அழைக்கப்பட்டது. (கணேஷ வித்தியாலயம்) இவ்வேளையில்தான் கண்ணாயுதபிள்ளை வண்ணக்கரும் ஊரில் சிலரும் எங்களுக்கும் ஒரு பாடசாலை தேவையென ஆலோசித்தனர். இந்த நல்ல கைங்காரியத்திற்கு உதவ ஊர்மக்களும் முன்வந்தனர். கண்ணாயுதபிள்ளை வண்ணக்கருடன் கந்தையா கண்டாக்கர், பழனித்தம்பி தோம்புதோர் மற்றும் ஊர் பெரியோர்களும் இதற்கு ஆதரவளித்தனர்.

மெதடிஸ்த மிஷன் கல்விக்கமிட்டித் தலைவர் திரு. ஜோன் கில்னருக்கு இது தொடர்பாக விண்ணப்பம் செய்யப்பட்டது. கமிட்டியின் (குழு) தீர்மானத்திற்கேற்ப களுதாவளை மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை 1871ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தற்போதைய தேவாலயத்தின் வடக்கு பக்கமாக வீதியை அடுத்துள்ள காணியில் அத்திவாரம் (ட) வடிவில் கிழக்கு, மேற்காக அமைக்கப்பட்ட இப்பாடசாலை கட்டடம் செங்கல்லினால் கட்டப்பட்டு நீற்றினால் பூசப்பட்டு கூரை முழுவதும் தென்னங்கீற்றினால் வேயப்பட்டிருந்தது. இப்பாடசாலை அமைந்திருந்த காலத்தில் தேவாலய வீதி பாடசாலை வீதி (School Road) என அழைக்கப்பட்டது. சமயக் குருமார்களால் கல்விப்பணி ஆரம்பிக்கப்பட்ட பாரம்பரிய கிராமங்களில் களுதாவளைக் கிராமமும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாட்களில் மாணவருக்கு கல்வி போதிப்பது ஒரு கஸ்டமான காரியமாகவே இருந்தது. குருமார் மாணவர்களை வீடுவீடாக, குடும்பம் குடும்பமாக தேடிச்சென்று அழைத்து வந்தனர். சில மாணவருக்கு உணவு, உடை அளித்தனர். சில மாணவருக்கு தங்குமிட வசதியும் அளித்தனர். பாடசாலை வரவு ஒழுங்கு, நேரசூசி அறிமுகமாக்கி கல்வி போதிக்கப்பட்டது. மாணவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் கல்விகற்கும் முறையும் ஏற்பட்டது. காலங்கள் கடந்து செல்லச்செல்ல களுதாவளை கிராமத்தின் மாணவர் தொகையும் அதிகரிக்கவே எண், எழுத்து, இலக்கியம் என அடங்கியிருந்த கல்வி அறிவுத்துறையில் பரந்துவிரிபுபட தொடங்கியது.

ஆரம்பவகுப்பில் இருந்து கனிஷ்ட வகுப்பு (J.S.C) வரை வளர்ந்து பின் சிரேஸ்டதராதரம் (S.S.C) வகுப்பு வரை வளர்ச்சியடைந்தது. இக்காலத்தில் இப்பாடசாலையில் களுதாவளை கிராம மக்களுக்கு மாத்திரமன்றி கல்லாறு, ஓந்தாச்சிமடம், எருவில், குருமன்வெளி, களுவாஞ்சிகுடி, தேற்றாத்தீவு, மண்டூர், பழுகாமம், குருக்கள்மடம், செட்டிபாளையம் போன்ற கிராம மாணவர்களும் இங்கு வந்து கல்வி கற்றனர். அக்காலத்தில் மட்டக்களப்பு கல்முனைக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் புகழ்பெற்ற பாடசாலையாக இப்பாடசாலை விளங்கியது. இப்பிரதேசத்தின் பல கிராமங்களிலும் தூர இடங்களிலும் இருந்து பெருமளவிலான மாணவர்கள் இங்கு வந்து கல்விகற்றது பலவழிகளிலும் இக்கிராமத்தின் புகழுக்கும் அதன் பெருமைக்கும் அதன் செழுமைக்கும் இப் பாடசாலையே அக்காலத்தில் காரணமாய் இருந்தது.

இப்பிரதேசத்தில் களுதாவளையில் அமைக்கப்பட்ட இப்பாடசாலை 7 சதாப்தகாலம் சேவைபுரிந்தது. 1871 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இப்பிரதேசத்தின் தனித்துவம்மிக்க பாடசாலையாக நீண்ட காலம் இயங்கி இக்கிராமத்திலும் அயற்கிராமத்திலும் கற்றோர் பலரை உருவாக்கியது. இக்கிராமத்தின் பழமையின் சின்னமான இப்பாடசாலை இக்கிராம வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியது. மேலும் இப்பாடசாலையில் கல்விகற்ற மாணவர்கள் சீரான ஒழுங்கு முறையையும் நல்ல தலைமைத்துவ பண்புகளையும் கொண்டு விளங்கினர். இப்பாடசாலையில் கல்வி போதித்தவர்களான களுதாவளையைச் சேர்ந்த கந்தப்பன் கண்ணாயுதபிள்ளை, கந்தப்பன் ஆறுமுகம் முதற்கொண்டு திரு. திருமதி. பூபாலபிள்ளை (கல்லாறு), திரு. நாகமணி, திரு. தம்பாப்பிள்ளை (பழுகாமம்), திரு. டேவிட் கந்தையா, திரு. திருமதி. இராசரெட்னம் (களுவாஞ்சிகுடி), திருமதி. வண்ணமணி மாணிக்கப்போடி (களுதாவளை/போரதீவு) திரு. பவளசிங்கம் (எருவில்), திரு. ஜேம்ஸ் தம்பிராஜா (களுதாவளை), செல்வி. குஞ்சுத்தம்பி செல்லத்தங்கம் (கல்முனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாகும். இப்பாடசாலையில் ஆரம்ப காலத்தில் கல்வி கற்று பிற்காலத்தில் புகழ்பூத்த பெரியோர்கள் புலவர் மணி ஏ.பெரியதம்பிபிள்ளை. வித்துவான் வி.சி.கந்தையா, திரு பூபாலபிள்ளை பண்டிதர் போன்றவர்கள் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள்.

இப்பாடசாலையில் கல்விகற்று களுதாவளை கிராமத்தில் ஆசிரியர்களாக தொழில் பெற்றுக் கொண்டவர் களில் சின்னத்தம்பி சாமுவேல் செல்லையா, திரு. க. ஜேம்ஸ் தம்பிராசா, சின்னத்தம்பி கண்ணமுத்து, குஞ்சுத்தம்பி தம்பிப்பிள்ளை, சபாபதி வசந்தராசபிள்ளை, கிருஸ்ணபிள்ளை கனகரெத்தினம், குருநாதர் சோமசுந்தரம், மூத்ததம்பி காத்திகேசு, திருமதி. இலெட்சுமி இராசதுரை (வள்ளியம்மை) (களுதாவளையின் முதல் ஆசிரியை) சீனித்தம்பி கிருஷ்ணன், கணபதிப்பிள்ளை அழகரெத்தினம், கதிர்காமத்தம்பி மற்றும் மயில்வாகனம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

காலப்போக்கில் நாட்டின் அரச நிருவாகத்தில் மாற்றம் ஏற்படவே அக்கால அரசினரால் இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. நாடெங்கும் அரசினர் பாடசாலைகள் உருவாகத் தொடங்கின. அந்த வகையில் களுதாவளை யிலும் அரசினர் பாடசாலை அமைக்கும் தேவை உணரப்பட்டது. உடனடியாக இப்பாடசாலை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக களுதாவளை மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் ஒரு பகுதியில் (மண்டபத்தில்) அமைக்கும் நோக்கமாக அக்காலத்தில் கிழக்கு மாகாண மெதடிஸ்த மிஷன் பொது முகாமையாளரான புறோக்கர் எஸ்.ஏ.செல்வநாயகம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராஜன் செல்வநாயகத்தின் தந்தை) அனுமதியுடன் மெதடிஸ்த மிஷன் திருச்சபை கல்வி கமிட்டியின் உதவியோடு களுதாவளை அரசினர் கனிஷ்ட பாடசாலை உருவாக்கப்பட்டது. 1871 தொடக்கம் 1944 வரை மெதடிஸ்த மிசன் பாடசாலையாக இயங்கிய இப்பாடசாலை 01.01.1944 இல் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களைக் கொண்டு களுதாவளை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்று அழைக்கப்பட்டதோடு, 1951ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி அரசினர் ஆங்கில கனிஷ்ட பாடசாலை என்ற பெயரில் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் வகுப்புக்களில் 25 மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தேவாலய வீதியில் மெதடிஸ்த தேவாலயத்திற்கு அருகாமையில் அமைந்திருந்த மெதடிஸ்த மிசன் பாடசாலை வளவிலேயே தனியான ஒரு கட்டடத்தில் புதிய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்பவிழாவிற்கு அப்போதைய உதவிக் கல்வி அமைச்சர் கௌரவ க. கனகரெத்தினம் அவர்கள் கலந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதுடன் அவருக்கான வரவேற்புப் பாடல் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் இப்பாடசாலை ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது. பாடசாலையின் முதலாவது தலைமை ஆசிரியராக, மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் கற்பித்துக் கொண்டிருந்த இதே கிராமத்தைச் சேர்ந்தவரும், இக்கிராமத்தின் முதலாவது பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியருமான திரு.வே.வயிரமுத்து அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர் 01.05.1951 தொடக்கம் 06.01.1954 வரையிலும் மீண்டும் 03.09.1957 தொடக்கம் 31.12.1960 வரையிலும் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி உள்ளார். பாடசாலையின் முதலாவது மாணவராக ப. கனகரெத்தினம் அவர்களின் பெயர் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவரே களுதாவளைக் கிராமத்தின் முதலாவது பட்டதாரியும், வெளிநாட்டுத் தூதரக சேவையின் முன்னோடியுமாவார். பாடசாலை சிறப்பாக இயங்கத் தொடங்கியதும் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த இக்கிராம மாணவர்களும், இவர்களை அடியொற்றி அயற்கிராம மாணவர்களும் இங்கு வந்து கல்வியைத் தொடர்ந்தனர்.

இப்பிரதேசத்தில் முதன்முதலாக பெற்றோர் தினவிழா, இல்ல விளையாட்டுப்போட்டி மாணவர் கல்விச் சுற்றுலா போன்றவற்றை நடத்திய பெருமை இப்பாடசாலைக்கு உண்டு, இப்பாடசாலையில் கல்வியை பெற்றவர்கள் இக்கிராமத்துக்கு பெருமை தேடிக்கொடுத்தார்கள். ஒரே கட்டடத்தில் இயங்கி வந்த இவ்விரு பாடசாலைகளின் மெதடிஸ்த மிஷன் பாடசாலை தலைமை ஆசிரியராக திரு.க.ஜேம்ஸ் தம்பிராசா இருந்தார்கள். இவ்விரு பாடசாலைகளும் இயங்கிவந்த காலத்தில் மாணவர் தொகையும் அதிகரிக்கவே கற்றல் கற்பித்தல், பௌதீக தேவைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. எனவே இக்கிராம மக்களின் வேண்டுகோளின்படி இக்கிராமத்தின் வடக்குத் திசையில் அரசினரால் பல ஏக்கர் காணிகள் பெறப்பட்டு இவ்விரு பாடசாலைகளும் இணைந்து புதிய பாடசாலைக் கட்டிடம் கட்டப்பட்டு திறக்கப்பட்டது. இப்பாடசாலைக் கட்டிடம் அமைப்பதற்கு காரணமான அக்கால கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.யு. எதிர்மன்னசிங்கமாவார்.

பாடசாலையின் தொடக்க காலத்திலேயே இல்ல விளையாட்டுப் போட்டி உட்பட பல்வேறு இணைப் பாடவிதானச் செயற் பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டி 1953 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22 ஆம் திகதி நடத்தப்பட்டுள்ளது. இவரது வழிநடத்தலில் செல்வி ப. இலட்சுமி அவர்கள் 1959 ஆம் ஆண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் பங்குபற்றி பணப்பரிசினையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். 1953 ஆம் ஆண்டில் ஆங்கிலமொழிமூலத்தில் நடைபெற்ற J.S.C தெரிவுப் பரீட்சையில் தோற்றிய அனைவரும் சித்தியடைந்தனர். ப.கனகரெத்தினம், த.கனகசபை, பெ.வீரபத்திரன், வே.தருமரெத்தினம், சி.சிவசுப்பிரமணியம், ச.சந்திரசேகரம். சி.குழந்தைவேல், க. வசந்தராசபிள்ளை, செ.தேவசகாயம், பூ.சாமித்தம்பி, மற்றும் தேற்றாத்தீவுக் கிராமத்தைச் சேர்ந்த வே.சதாசிவம், க.கோபாலபிள்ளை ஆகியோர் சித்தியடைந்து மேல்வகுப்பு இன்மையினால் நகர்ப்புறப் பாடசாலைகளுக்குச் சென்றனர். இவர்களை திரு.வே.வைரமுத்து அதிபர் அவர்களே பரீட்சைக்காகத் தயார்ப்படுத்தியிருந்தார். 07.01.1954 தொடக்கம் 30.08.1957 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த திரு.க.செல்வதுரை அவர்கள் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். இவரது காலப்பகுதியில் சிரேஸ்ட பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்பு (S.S.C.) ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆரம்பப் பிரிவு வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டன. 1955 ஆம் ஆண்டில் J.S.C. பரீட்சை நிலையமாகவும் இப்பாடசாலை தெரிவு செய்யப்பட்டது. இக்காலப்பகுதியிலேயே சிரேஸ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு (S.S.C) மாணவர்கள் முதன்முதலாகத் தோற்றியதுடன் அவர்களில் ப.செல்வநாயகம், இ.வடிவேல் ஆகியோர் சித்தியடைந்து நம்பிக்கையூட்டினர்.

பாடசாலை நிறுவப்பட்ட இடம், பாடசாலைக்குச் சொந்தமாக இல்லாமையினாலும், இடநெருக்கடி காரணமாகவும் 1953ம் ஆண்டில் வன்னியனார் வத்தையில் கேற்றுவாசல் எனும் இடத்தில் பிரதான வீதிக்கருகாமையில் 5 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டு தற்போது இயங்கும் இடத்தில் 15.01.1959 முதல் செயற்பட்டு வருகின்றது. புதிய இடத்தில் 120' X 20' கட்டடமொன்றுடனும் அதிபர் விடுதியுடனும் மட்டுமே பாடசாலை இயங்கத் தொடங்கியது. இவரது காலப்பகுதியில் வளர்ந்தோருக்காக இரவு நேர வகுப்புக்களும் நடத்தப்பட்டன. இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் இக்காலத்தில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன. 1955 ஆம் ஆண்டில் கல்முனை வட்டாரப் பாடசாலைகள் மத்தியில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் இப்பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி 3 நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றிருந்தனர். சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு பட்டிருப்பு பாடசாலைகள் மத்தியில் நடத்தப்பட்ட நான்கு போட்டிகளில் இப்பாடசாலை மாணவர்கள் மூன்று போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.01.1961 தொடக்கம் 30.06.1961 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம் சித்தங்கேணியைச் சேர்ந்த விஞ்ஞானப் பட்டதாரியான திரு.என்.சிவஞானம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

பட்டிருப்புத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கௌரவ எஸ்.எம்.இராசமாணிக்கம் அவர்கள், பட்டிருப்புத் தொகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு பட்டதாரிகள் அதிபர்களாக நியமிக்கப்பட வேண்டுமென பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தமையின் விளைவாகவே இவர் அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார். இவரது காலப்பகுதியில் பாடசாலைக்காக 100' X 20' புதிய கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

சிவஞானம் அதிபரைத் தொடரந்து நாவற்குடாவைச் சேர்ந்த திரு.எஸ்.தம்பிராசா அவர்கள் அதிபராகக் கடமையேற்றார். இவர் 01.07.1961 தொடக்கம் 31.08.1965 வரையிலும் மீண்டும் 13.10.1965 தொடக்கம் 06.01.1966 வரையிலும் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இவரது காலப் பகுதியில் பாடசாலை மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டதுடன் கொங்கிறீற்றிலான பெயர்ப் பலகையும் இடப்பட்டது. மேலும் 1965 ஆம் ஆண்டிலிருந்து க.பொ.த.(சாதாரண தர) பரீட்சைக்கான பரீட்சை நிலையமாகவும் பாடசாலை செயற்பட்டு வருகின்றது. மேலும் இவரது காலப்பகுதிலேயே முதற்தடவையாக தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளில் இப்பாடசாலை மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர்.

தம்பிராசா அதிபர் அவர்களைத் தொடர்ந்து களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த திரு. பி. இராசரெத்தினம் அவர்கள் அதிபராகக் கடமையேற்றுக் கொண்டார். இவர் 01.09.1965 தொடக்கம் 12.10.1965 வரையிலும் மீண்டும் 07.01.1966 தொடக்கம் 20.08.1966 வரையிலுமான குறுகிய காலப்பகுதியிலேயே அதிபராகக் கடமையாற்றினார். இவர் இடமாற்றலாகிச் சென்றபோது ஆரையம்பதியைச் சேர்ந்த திரு.எஸ்.சந்திரசேகரம் அவர்கள் 31.12.1966 வரை பதில் அதிபராகக் கடமையாற்றினார்.

வித்துவான் பண்டிதர் வி.சீ.கந்தையா அவர்கள் 01.01.1967 தொடக்கம் 31.12.1971 வரை அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இவர் களுதாவளைக் கிராமத்தின் ஸ்தாபகப் பாடசாலையான மெதடிஸ்த மிசன் பாடசாலையின் பழைய மாணவராவார். இவரது காலப்பகுதியில் பாடசாலையின் மாணவர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்தது. பாடசாலையின் தரத்தினை மகா வித்தியாலயமாகத் தொடர்ந்தும் பேண வேண்டுமாயின் மாணவர் எண்ணிக்கையை உயர்வானதாக வைத்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் களுதாவளை இராமகிருஸ்ண மிசன் பாடசாலையில் கல்விகற்ற 6ம், 7ம், 8ம் வகுப்பு மாணவர்கள் ஒரே தடவையிலுமாக இணைக்கப்பட்டமையினால் இத்துரித அதிகரிப்பு ஏற்பட்டது.

மாணவர் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் உயர்கல்விக்காக வேறு பாடசாலை களுக்குச் செல்ல வேண்டியிருந்தமை குறைபாடாக அவதானிக்கப்பட்டது. இதனால் இப்பாடசாலையிலேயே உயர்தர வகுப்பினை ஆரம்பிக்க வேண்டுமென பெற்றோர் விரும்பினர். 1968 ஆம் ஆண்டில் பெற்றோரின் விருப்பத்தின்படி உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டபோதும் இம்முயற்சி வெற்றிபெறவில்லை. இதனால் மீண்டும் கல்விப்பணிப்பாளரின் நேர்முக அனுமதியின்படி 1971ம் ஆண்டில் உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

வித்துவான் பண்டிதர் வி.சீ.கந்தையா அவர்களின் காலப் பகுதியிலேயே இப்பாடசாலையின் வரலாற்றில் முதற்றடவையாக 1967 ஆம் ஆண்டில் 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் **ப.குணசேகரன்** என்ற மாணவன் சித்தியடைந்து பாடசாலைக்குப் புகழ் தேடிக் கொடுத்ததுடன், இப்பாடசாலை மாணவர்களாலும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய முடியும் என்பதை எடுத்துக் காட்டினார். இவரது இந்த வெற்றிக்கு திரு.ந.ஞானசூரியம் ஆசிரியரின் அர்ப்பணிப்பான சேவை முக்கிய காரணமாகும். மேலும் பாடசாலைக் கீதம் அதிபர் அவர்களாலேயே இயற்றப்பட்டு இசையமைக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டிதர் வி.சீ.கந்தையா அவர்கள் மட்/பட்டிருப்பு மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டபோது மட்டக்களப்பைச் சேர்ந்த திரு.எல்.எம்.ஜோசேப் அவர்கள் 01.01.1972 இல் அதிபராகக் கடமையேற்று 17.10.1976 வரை சேவையாற்றினார். இவர் 1972 இல் கடமையேற்றபோது உயர்தர வகுப்பிற்கான எழுத்து மூலமான அங்கீகாரமும் கிடைத்தது. இவ்வகுப்பு சிறப்பாக இயங்கியமையினால் வேறு கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் வரத்தொடங்கினர். முதற்றொகுதி மாணவர்கள் 1974 ஆம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றினர். முதலாவது முயற்சியிலேயே பூ.வேதநாயகி, கி.மயில்வாகனம், வ.கனகரெத்தினம், வ.சின்னத்தம்பி, ச.நாகராசா, க.கண்மணி ஆகிய ஆறு மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களது இவ்வெற்றிக்கு திரு.எல்.எம். யோசேப் (அதிபர்), மற்றும் திரு.தெ.சுப்பிரமணியம், திரு.சி.குமாரசாமி, திரு.பொ.சிவபாதம், திரு.க.பரராசசிங்கம் ஆகிய ஆசிரியர்களின் நுட்பமான கற்பித்தலே காரணமாகும். இவ்வாரம்பம் சிறப்பாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தமையினால் தொடர்ச்சியாகப் பெருமளவு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பினைப் பெற்றுவருகின்றனர்.

1971ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்த கலைத்திட்டத்தின்படி 9ஆம் வகுப்பிலேயே மாணவர்கள் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் என துறை ரீதியாகப் பிரிக்கப்பட்டனர். இப்பாடசாலையில் கலைப்பிரிவு மாத்திரமே இருந்தமையினால் வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளைப் பயில்வதற்காக வேறு பாடசாலைகளுக்கு மாணவர்கள் சென்றனர். 1972 ஆம் ஆண்டில் புதிய கல்விச் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டபோது 10 ஆம் வகுப்பு வரை அனைவருக்கும் பொதுக்கல்வி வழங்கப்பட்டது. இதனால் விஞ்ஞான பாடத்தினைப் போதிப்பதற்கு விஞ்ஞான ஆய்வுகூடம் உடனடித் தேவையாக இருந்தது. இதனால் கிராம மக்களின் பங்களிப்புடன் 30' x 20' விஞ்ஞான அறை நிர்மாணிக்கப்பட்டு திணைக்களத்தினால் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்வகையில் களுதாவளை 1 ஆம் குறிச்சி கிராம அபிவிருத்திச் சங்கம் கிணறு ஒன்றினை 1972ஆம் ஆண்டில் நிறுவியது. மேலும் பாடசாலைக்கான சுற்றுமதில் அமைப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் இவரது காலப்பகுதியில் எடுக்கப்பட்டன. பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் ஒத்துழைப்புடன் கிராமத்தில் வீடு, வீடாகச் சென்று நிதி திரட்டப்பட்டு முன்பக்கச் சுற்றுமதிலின் ஒருபகுதி கட்டப்பட்டதுடன் இரும்புக் கேற்றும், அதில் பாடசாலைப் பெயர்ப்பலகையும் அமைக்கப்பட்டன. 80' X 20' வகுப்பறைக் கட்டடமும் 1976 இல் அமைக்கப்பட்டது.

பாடசாலையின் சாரணிய வரலாற்றிலும் இவரது காலப்பகுதி சிறப்பிடம் பெறுகின்றது. முதன்முதலாக பாடசாலையின் சாரணியர் அணி உருவாக்கப்பட்டது. இதற்குப் பொறுப்பாக திரு.கே.ஸ்ரீனிவாசன் ஆசிரியர் அவர்களும், திரு.எம்.ஞானப்பிரகாசம் ஆசிரியர் அவர்களும் செயற்பட்டனர். அவர்களால் உருவாக்கப்பட்ட பாடசாலைச் சாரணியம் இன்று வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. புதிய கல்விச்சீர்திருத்தத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்திய திரு.எல்.எம்.யோசேப் அதிபர் அவர்கள் அதற்குரிய வெகுமதியினைப் பெற்றதுபோல 1976 இல் வட்டாரக் கல்வியதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றார்.

இதனைத் தொடர்ந்து பழுகாமம் கிராமத்தினைச் சேர்ந்த வித்துவான் க. செபரெத்தினம் அவர்கள் 18.10.1976 தொடக்கம் 31.12.1977 வரை அதிபராகக் கடமையாற்றினார். குறுகிய காலப்பகுதியிலேயே இவர் மட்/ பட்டிருப்பு மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றலாகிச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபரெத்தினம் அதிபர் அவர்களைத் தொடர்ந்து பெரியபோரதீவு கிராமத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞரான பண்டிதர் ப.முருகேசு அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். 01.01.1978 தொடக்கம் 03.05.1985இல் தான் ஓய்வு பெறும்வரை இப்பாடசாலையின் அதிபராகப் பணியாற்றினார். க.பொ.த.(உ/த) வர்த்தகக் கல்விக்காக மாணவர்கள் பிறபாடசாலை களுக்குச் செல்லவேண்டியிருந்த குறைபாட்டினைப் போக்கும் வகையில் 1978ம் ஆண்டில் க.பொ.த (உ/த) வர்த்தகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. வர்த்தகப் பட்டதாரிகள் இல்லாத நிலையிலும் பயிற்றப்பட்ட வர்த்தக ஆசிரியரான திரு.க.தெய்வநாயகம் அவர்களின் அர்ப்பணிப்புடன் இவ்வகுப்பு ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது முயற்சியின் பேறாக முதற்றொகுதி மாணவர்களில் வ.விஸ்வநாதன், சி.இந்திராகாந்தி ஆகிய இரு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டதுடன் அடுத்த வருடம் வர்த்தகத்துறைக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகமான மாணவர்கள் இப்பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்டமை விசேட அம்சமாகும்.

23.11.1978 இல் மட்டக்களப்பு மாவட்டத்தினை மிக மோசமாகத் தாக்கிய சூறாவளி பாடசாலையின் கட்டடங்களை நிர்மூலமாக்கியது. பாடசாலையின் ஆரம்பக் கட்டடத்தின் கூரை தூக்கி வீசப்பட்டதுடன், ஏனைய கட்டடங்கள் முற்றாகத் தரைமட்டமாகின. கட்டடங்கள் அழிவடைந்த நிலையிலும் மாணவர்களின் கல்வி பாதிக்கப் படாமலிருப்பதற்காக கிராம மக்களின் பூரணமான ஒத்துழைப்பினைப் பெற்று தற்காலிகக் கொட்டில்களை அமைத்து பாடசாலை சிறப்பாக இயங்குவதற்கு வழிசெய்தார். எனினும் காலப்போக்கில் சூறாவளியினால் அழிவடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன. பாடசாலையின் தென்புறத்தில் 80' × 20' கட்டடமொன்றும் 60' X 20' கட்டடமொன்றும் 1981ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டன. 1984இல் தென்புறத்திலுள்ள 100 X 20 கட்டடமும் வடபுறமுள்ள 120 X 20' கட்டடமும் அமைக்கப்பட்டன. மேலும் மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி இவரது காலப்பகுதியிலேயே அறிமுகப் படுத்தப்பட்டது.

பண்டிதர் முருகேசு அவர்கள் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து குருக்கள்மடம் கிராமத்தைச் சேர்ந்த திரு.சி.குமாரசாமி அவர்கள் 07.05.1985இல் அதிபராகப் பொறுப்பேற்று 16.11.1987 வரை சேவையாற்றினார். இவர் இப்பாடசாலையின் க.பொ.த.(உ/த) ஆரம்ப வகுப்பின் ஆசிரியர்களுள் ஒருவராவார். களுதாவளை மகா வித்தியாலயமானது விளையாட்டுத் துறையில் முன்னணிப் பாடசாலையாக இருந்தபோதிலும் பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் இல்லாமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்குறைபாடாகவே இருந்தது. 1953ம் ஆண்டிலிருந்து வருடாந்தம் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற போதிலும் இவை அனைத்தும் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னாலுள்ள பன்குளம் வற்றிய பின்னரேயே அங்கு நடத்தப்பட்டுள்ளது. இக்குறைபாட்டினை நீக்கும்வகையில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவியுடன் கிராம மக்களின் பங்களிப்புடன் பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டு 18.02.1987இல் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலையின் முதலாவது மாடிக்கட்டடமும் (90' x 25) இவரது காலப்பகுதியிலேயே அமைக்கப்பட்டது. உயர்தர விஞ்ஞான வகுப்பினை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் இவரால் எடுக்கப் பட்டபோதிலும் அம்முயற்சி வெற்றிபெறவில்லை.

திரு.சி.குமாரசாமி அவர்கள் கொத்தணி அதிபராக செட்டிபாளையம் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டபோது, இக்கிராமத்தைச் சேர்ந்த பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியரும், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரும், இப்பாடசாலையின் ஆரம்ப மாணவர்களில் ஒருவருமான திரு.பெ. வீரபத்திரன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய, முதலாவது பழைய மாணவர் இவராவார். இவர் 17.11.1987 தொடக்கம் 30.06.1991 வரை அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இவர் பதவியேற்ற மிகக்குறுகிய காலப்பகுதிலேயே 21.12.1987 இல் பாடசாலையின் ''மருப்பு'' சஞ்சிகை கல்லச்சு வடிவில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நூலுக்கான பெயரை பழையமாணவரும் அக்கால ஆசிரியருமாகிய திரு.த.குணநாயகம் அவர்கள் சூட்டியிருந்தார். மேலும் பாடசாலைக்கான இலச்சினையும் உருவாக்கப் பட்டது. இவ்விலச்சினையை வடிவமைப்பதில் திரு.செ.டானியல் ஆசிரியரும் திரு.சீ.கிருஸ்ணன் ஆசிரியரும் முக்கிய பங்கு வகித்தனர். தற்போதைய ஆரம்பப் பிரிவு வகுப்பறைக் கட்டடமான 100` X 20' கட்டடம் 1990 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டது.

திரு.பெ.வீரபத்திரன் அவர்கள் மட்/ஆனைப்பந்தி பெண்கள் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்டபோது, இப்பாடசாலையின் முதற்றொகுதி மாணவர்களில் ஒருவராகப் பல்கலைக்கழகம் நுழைந்த திருமதி வே.குணநாயகம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் 05.07.1991 தொடக்கம் 23.01.1994 வரை அதிபராகப் பணியாற்றினார். இப்பாடசாலையில் பணியாற்றிய ஒரேயொரு பெண் அதிபர் இவரேயாவார். இவரது காலப்பகுதியில் பாடசாலை இலச்சினையின் வடிவம் மாற்றியமைக்கப்பட்டது. இதற்கு திரு.க.சுந்தரலிங்கம் ஆசிரியர் பக்க பலமாக இருந்தார். 1992ம் ஆண்டில் நடைபெற்ற தமிழ்மொழி தினப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியில் இப்பாடசாலை மாணவன் வீ.உதயகுமார் பாவோதல் நிகழ்ச்சியில் தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தினைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார்.

மேலும் இதே ஆண்டில் மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகள் மத்தியில் சூழல் மாசடைதல், சூழல்பாதுகாப்பு என்ற தொனிப்பொருள்களில் நடத்தப்பட்ட சுவரோவியப் போட்டிகளில் திரு.க.சுந்தரலிங்கம் ஆசிரியரின் நெறிப்படுத்தலில் இப்பாடசாலை மாணவர்கள் முதலிடங்களைப் பெற்றுக் கொண்டனர். பெண்கள் சாரணியமும் இவரது காலப்பகுதியில் இப்பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் பொறுப் பாசிரியர்களாக ஆரம்பத்தில் செல்வி. ஜெ.கணபதிப்பிள்ளை. செல்வி. க. தருமரெத்தினம் ஆகியோர் செயற்பட்டனர். மேலும் மட்டக்களப்பு மாவட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினரான கோ.கருணாகரன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் 60' x20' வகுப்பறைக் கட்டடம் 1992 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டது.

திருமதி வே.குணநாயகம் அவர்களைத் தொடர்ந்து, இப்பாடசாலையின் உயர்தர வகுப்பு முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டபோது கற்பித்த ஆசிரியர்களுள் ஒருவரான பாண்டிருப்பைச் சேர்ந்த திரு.தெ.சுப்பிரமணியம் அவர்கள் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார் இவர் 24.01.1994 தொடக்கம் 10.10.1996 வரை அதிபராகக் கடமையாற்றினார். இவரது காலப்பகுதியில் பாடசாலை மேலும் வளர்ச்சி பெற்றது. பாடசாலையில் உயர்தர விஞ்ஞானப் பிரிவை ஆரம்பிப்பதற்கு அரும்பாடுபட்டு திணைக்கள அனுமதியைப் பெற்றுக்கொடுத்தார். இதனை நினைவுகூரும் வகையிலேயே இப்பாடசாலையின் பழையமாணவரான திரு.ச.நேசராசா கணக்காளர் அவர்கள் இப்பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் கல்விகற்று பல்கலைக்கழகம் செல்வோருக்காக "சுப்பிரமணியம் அதிபர் புலமைப் பரிசில்" என்ற பெயரில் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் புலமைப்பரிசில் வழங்கி வருகின்றார்.

மேலும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் திரு.கே.எஸ்.கணேசமூர்த்தி அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட ஒன்றுகூடல் மண்டபத்திற்கான கட்டடவேலைகள் இவரது காலப்பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டன. ஒன்றுகூடல் மண்டபத்திற்கான அடிக்கல் 30.06.1996 இல் கௌரவ கே.எஸ்.கணேசமூர்த்தி அவர்களால் நடப்பட்டது. இவரது காலப்பகுதியிலேயே 1994 ஆம் ஆண்டில் பாடசாலைப் பாண்டு வாத்திய அணி உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் திரு.சோ. திருநாவுக்கரசு ஆசிரியர் இதனை வழிநடத்தினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995 ஆம் ஆண்டில் இருந்து க.பொ.த உயர்தர பரீட்சை நிலையமாகவும் இப்பாடசாலை செயற்பட்டு வருகின்றது. 1996ம் ஆண்டில் மகளிர் அமைப்பினால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் திரு.ச.நாகராசா ஆசிரியரின் வழிநடத்தலில் க.பாஸ்கரன் முதலிடம் பெற்றார். மேலும் 1996இல் கிராம மக்களின் நிதி உதவியுடன் பாடசாலைக்கு அருகில் 1/2 ஏக்கர் காணி கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலைக் காணி விஸ்தரிக்கப்பட்டது.

திரு. தெ. சுப்பிரமணியம் அவர்கள் மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்திற்கு அதிபராக மாற்றம் செய்யப்பட்டபோது தேற்றாத்தீவைச் சேர்ந்த திரு.க.செந்தில்நாயகம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் 11.10.1996 தொடக்கம் 09.12.1999 வரை அதிபராகப் பணியாற்றினார். இவரது காலப்பகுதியில் 20.03.1997 இல் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.எஸ்.எஸ்.மனோகரன் அவர்களால் உயர்தர விஞ்ஞான வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வகுப்பில் கல்விகற்ற அனைவரும் முதற்றடவையிலேயே சித்தியடைந்ததுடன் அ.ஜெயராஜா. ச.ராதிகா ஆகிய இரு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வகுப்பின் வெற்றிக்கு திரு.வே.மயில்வாகனம், திருமதி.உ.மயில்வாகனம், திரு.மா.தணிகாசலம், திரு கா.கந்தசாமி செல்வி சி.தட்சாயினி ஆசிரியர்கள் பக்கபலமாக இருந்தனர். திரு.ந.நடேசமூர்த்தி, திரு.ஜீ.அன்னநவபாரதி, திரு.வே.பிரபாகரன் போன்ற வெளி ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் கிடைத்தது. திரு.வே.மயில்வாகனம் இரவு நேரங்களில் தனது வீட்டிலேயே மாணவர்களை வைத்திருந்து அவர்களை வழிநடத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

1996 இல் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றுகூடல் மண்டப வேலைகள் நிறைவு பெற்று 03.03.1999 இல் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் திரு.கே.எஸ்.கணேசமூர்த்தி அவர்களாலும் கௌரவ தொலைத்தொடர்புகள், வெகுஜனத் தொடர்பு பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.கிஸ்புல்லா அவர்களாலும் திறந்து வைக்கப்பட்டது. இவ்வொன்றுகூடல் மண்டபமானது இப்பிரதேசத்தில் நிகழும் போட்டி நிகழ்ச்சிகளுக்குரிய அரங்காகவும், விழாக்கள் நடத்தப்படும் மண்டபமாகவும் இன்றுவரை செயற்பட்டு வருகின்றது.

மேலும் இவரது காலப்பகுதியில் 1999ம் ஆண்டில் 77 ஆம் சர்வதேச கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட மத்தியபிரிவு பொது அறிவுப் போட்டியில் த.தர்சினி, அ.எழில்நிலா, வி.பிரசாந்தி, சி.ஜெயகாந் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுப் பாடசாலைக்குப் புகழ்சேர்த்தனர். 1997 ஆம் ஆண்டில் புதிய கல்விச் சீர்திருத்தம் முன்வைக்கப்பட்டபோது பாடசாலைகளின் கட்டமைப்பிலும் மாற்றங்கள் முன்மொழியப்பட்டது. இதன் அடிப்படையில் களுதாவளை இராமகிருஸ்ண மிசன் பாடசாலையில் தரம் 9 வரை வகுப்புக்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டதனால் மகா வித்தியாலய மாணவர் எண்ணிக்கையும் தொடர்ந்த 4 வருடங்களில் வீழ்ச்சியடைந்தது.

திரு.க.செந்தில்நாயகம் அவர்கள் பட்டிருப்பு கல்வி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றபோது பிரதி அதிபராகக் கடமையாற்றிய, இப்பாடசாலையின் ஊடாக பல்கலைக்கழகம் நுழைந்த முதற்றொகுதி மாணவர்களில் ஒருவரான திரு.வ.கனகரெத்தினம் அவர்கள் 10.12.1999 அன்று பாடசாலைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவரது காலப்பகுதியில் மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வியினைச் சிறப்பாக வழங்குவதற்கு வசதியாக செயற்பாட்டறை, விவசாய வகுப்பறை என்பன 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன. உயர்தர மாணவர்களுக்கு செயல்முறை ரீதியிலான விஞ்ஞானக் கல்வியினைச் சிறந்த முறையில் வழங்குவதற்காக இரண்டாம் நிலைக்கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் கீழ் உயர்தர விஞ்ஞான ஆய்வுகூடம் 2002ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இவ்வாய்வுகூடம் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ.ஞா. கிருஸ்ணபிள்ளை அவர்களால் திறந்து வைக்கப்பட்டதுடன் பன்முகப்படுத்தப் பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியின் மூலம் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான விஞ்ஞான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

கட்டாரில் தொழில் புரியும் பழைய மாணவரின் நிதியுதவியுடன் பாடசாலையின் முன்பக்க மதில் உயர்த்தப்பட்டதுடன் பாடசாலையின் நுழைவாயிலும் புதிதாக நிறுவப்பட்டது. கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ரூபா 50000 நிதி ஒதுக்கீட்டுடன் கிராமமக்களின் நிதியுதவியுடனும் 400' நீளமான தென்பக்க மதில் நிறுவப்பட்டுள்ளது. பல்லூடகக் கற்பித்தல் அலகு 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதற்காக பழைய மாடிக்கட்டடத்தின் ஒரு வகுப்பறை மீளமைப்புச் செய்யப்பட்டது. உலகவங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் பொதுக் கல்விச் செயற்றிட்டம் இரண்டின் கீழ் பாடசாலையில் கணினிக் கற்கை நிலையம் 2004 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ளது. இதற்காக பழைய மாடிக் கட்டடத்தின் 2 வகுப்பறைகள் மீளமைப்புச் செய்யப்பட்டன. நிர்வாக நடவடிக் கைகளை விரிவுபடுத்தும் வகையிலும் வகுப்பறைப் பற்றாக்குறையினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவர்த்திசெய்யும் வகையிலும் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.சாந்திதேவி பவளகாந்தன் அவர்களின் சிபார்சுடன் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ த.கனகசபை அவர்களின் முயற்சியினால் நெக்கோட் திட்டத்தின் நிதியுதவியுடன் 110' X 25' மாடிக்கட்டடம் நிறுவப்பட்டு 2005 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்திற்கான தளபாட வசதிகளை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வழங்கியுள்ளது.

பாடசாலையின் விளையாட்டுத் துறைக்குப் புதிய ஒரு பரிணாமத்தை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட திட்டப்பணிப்பாளர் க.சிவநாதன் அவர்களின் பெருமுயற்சியினால் மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் கூடைப்பந்தாட்ட மைதானம் 2006 இல் நிர்மாணிக்கப்பட்டது. கூடைப்பந்தாட்ட மைதானம் பட்டிருப்பு கல்வி வலயத்தில் இப்பாடசாலையிலேயே நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். யுனிசெப் நிதியுதவியுடன் புதிய நீர்த்தாங்கி, கிணறு என்பவை 2008 இல் நிறைவு பெற்றுள்ளன. மேலும் ஆசிரியர்களுக்கான விடுதியும் வலயக்கல்வித் திணைக்களத்தின் சிபார்சுடன் நெக்கோட் திட்டத்தின் நிதியுதவியுடன் 2008 இல் நிறுவப்பட்டுள்ளது, 2007 ஆம் ஆண்டில் படுவான்கரைப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மாணவரின் நன்மை கருதி சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் 100' x 20' தற்காலிக கட்டடத்தை நிறுவியுள்ளது.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் த.கனகசபை அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியின் கீழ் 2006 இல் விளையாட்டு உபகரணங்களும், 2007 இல் முச்சக்கர வண்டியும், 2008 இல் பாண்டுவாத்தியக் கருவிகளும் கிடைத்துள்ளன. ஓபர் நிறுவனம் பைசிக்கிள் தரிப்பிடம் ஒன்றை நிறுவித்தந்துள்ளது.

மாணவரின் கல்விப் பெறுபேறுகளைப் பொறுத்தவரையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை வரலாற்றில் 2005 ஆம் ஆண்டில் முதல் தடவையாக தாம் தோற்றிய 10 பாடங்களிலும் அதிவிசேட(10A) சித்திகளை அ.சுதாகரன், நே.தனுசானி ஆகியோர் பெற்றுக் கொடுத்தனர். க.பொ.த.உயர்தரப் பரீட்சையைப் பொறுத்தவரை 2006 ஆம் ஆண்டில் இப்பாடசாலையின் வரலாற்றிலேயே முதற்றடவையாக தி. ஜிறிதா என்ற மாணவி பொறியியல் பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். 2007 ஆம் ஆண்டில் 24 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளமையானது பாடசாலையின் வளர்ச்சியைக் காட்டிநிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இப்பாடசாலையின் முதலாவது பரிசளிப்பு விழா 09.12.2000 அன்று நடாத்தப்பட்டது. இப்பரிசளிப்பு விழாவுக்கு அப்போதைய கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மா.செ.மூக்கையா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்கள். அன்று ஆரம்பித்த பரிசளிப்புவிழா தொடர்ந்து வருடாவருடம் இடம்பெற்று வருகின்றது. 2001 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பப் பிரிவுக்கு வேறாகவும், சிரேஸ்ட பிரிவுக்கு வேறாகவும் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகின்றது. இந்நடைமுறை பட்டிருப்பு கல்வி வலயத்திலேயே இங்குதான் அறிமுகப்படுத்தப்பட்டது. 2001 ஆம் ஆண்டில் அ.மயூரதன் என்ற மாணவன் கோலூன்றிப் பாய்தல் நிகழ்ச்சியில் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார். இது பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளில் எமது மாணவன் ஒருவர் பெற்ற முதலாவது பதக்கமாகும்.

2006 ஆம் ஆண்டில் பவ்ரல் நிறுவனத்தினால் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட வினா விடைப் போட்டியில் ச.கிருஸ்சாந்தி, கு.புஸ்பலதா, வி.வினோதினி, க.பிரசாந்தன் ஆகியோர் பங்குபற்றி தேசிய மட்டத்தில் 2ம் இடத்தினைப் பெற்றுள்ளனர். 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ்மொழித் தினப்போட்டியில் நீ.சுரேஸ் கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தினையும், ம.ஸாருஜன் பாவோதல் போட்டியில் மூன்றாம் இடத்தினையும் தேசிய மட்டத்தில் பெற்றுக்கொண்டனர்.

2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக இக்கிராம மக்களின் பொருளாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் மாணவர்களின் கல்விநிலை பாதிக்கப்படாமலிருக்க பல அரசசார்பற்ற நிறுவனங்கள் பைசிக்கிள், சீருடைத்துணி, பாதணிகள், அப்பியாசக் கொப்பிகள். பாடசாலைப் பைகள் போன்றவற்றை மாணவர்களுக்காக வழங்கியுள்ளன. யுனிசெப், சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், உலக தரிசனம், ஒபர் ஸ்ரீலங்கா, இராமகிருஸ்ண மிசன், போருட் போன்றவை குறிப்பிடத்தக்க நிறுவனங்களாகும்.

எமது பாடசாலை வரலாற்றில் நீண்டகாலம் பணியாற்றிய திரு.வ.கனகரெத்தினம் அவர்கள் 30.06.2010 அன்று மட்/குருமன்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்திற்கு அதிபராக மாற்றம் செய்யப்பட்டபோது பிரதி அதிபராக கடமையாற்றிய திரு.கா.கந்தசாமி அவர்கள் கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பழுகாமத்தைச் சேர்ந்த திரு.பூ.பாலச்சந்திரன் அவர்கள் 05.07.2010 அன்று அதிபராக நியமிக்கப்பட்டார். திரு.பூ.பாலச்சந்திரன் அவர்கள் மட்/ தேற்றாத்தீவு மகாவித்தியாலயத்திற்கு அதிபராக 05.09.2011 அன்று இடமாற்றம் பெற்றுச் சென்றபோது எமது கிராமத்தைச் சேர்ந்த திரு.த.திருநாவுக்கரசு அவர்கள் 14.11.2011 அன்று அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் பழையமாணவர் சங்கத்தினால் தெற்குப் புறப்பக்கம் இருக்கும் சிறிய மதில் வேலிக்கான அடிக்கல் நாட்டப்பட்டு திரு.சி.அலோசியஸ் அதிபர் காலத்தில் முடிவுறுத்தப்பட்டது.

திரு.த.திருநாவுக்கரசு அதிபர் மட்/பட்/கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதன் பின்னர் 2012.04.23 ஆந்திகதி கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு.சி.அலோசியஸ் அவர்கள் தனது கோட்டக்கல்விப் பணிப்பாளர் பதவியை துறந்து தனது இறுதிக் காலத்தில் தான்கற்ற பாடசாலைக்கு அதிபராக கடமையாற்றுவதற்கு பழையமாணவர்களின் வேண்டுதலின் அடிப்படையில் தமது கடமையை பொறுப்பேற்ற அவர் எமது பாடசாலை வரலாற்றில் கலைத்திட்டம் மற்றும் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

2010ஆம் ஆண்டு அறிமுகமான ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கமைய எமது களுதாவளை மகா வித்தியாலயமும் தெரிவு செய்யப்பட்டது. இதற்கு முன்னாள் முதலமைச்சர் கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களது முயற்சி முக்கியமானதாகும். இதற்கமைய தொழில்நுட்ப ஆய்வுகூடம் இவரது காலத்தில் அமைக்கப்பட்டு இன்றும் தொழிற்படுகின்றது. ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகள் அபிவிருத்தித்திட்டமானது 2012-2016 ஆம் ஆண்டு காலகட்டத்திற்குள் செயற்படுத்தப்படுவதாகும். அதேவேளை ஊட்டப் பாடசாலைகளையும் இணைத்துக் கொள்ளும் பொறிமுறையும் இதனோடு இணைந்ததாக விளங்கியது.

1000 இடைநிலைப் பாடசாலை விருத்தியுடன் தொடர்பான தொழில் நுட்பகூடம் கட்டப்பட்டது. இது கணினி அலகு, கணித, பௌதீக ஆய்வு கூடம், உயிரியல், இரசாயனவியல் கூடம், மொழி அலகு, என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். திரு. சி. அலோசியஸ் அதிபர் பாடசாலை நிருவாகத்தைப் பொறுப் பேற்றபோது மாணவர்களுக்கான தளபாட குறைபாடுகள் காணப்பட்டன. புதிய செயற்றிட்டங்களான ஆய்வு கூடம், தொழில்நுட்பப் பிரிவு வளாகம் என்பனவற்றுக்கான புதிய தளபாடங்களைத் தவிர வேறு எந்த தளபாட வசதிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித்துறை சார் அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாகவும் அவரது காலத்தில் இருதடவைகள் எண்ணெய்ச் சிந்து பாடி எமது கிராம சமூகத்தின் மூலம் பெறப்பட்ட நிதியுதவியினாலும் பாடசாலை உட்கட்டமைப்பில் சீராக்கத்தை மேற்கொண்டார். இக்காலத்தில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கதிரைகள், மேசைகள் திருத்தம் செய்யப்பட்டு மாணவர் பாவனைக்காக விடப்பட்டு ஏனைய பாடசாலைகளில் மேலதிகமாக தேங்கியிருந்த தளபாடங்கள் சிலவும் வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் பெறப்பட்டன. இதனால் தளபாடப் பற்றாக்குறையை ஓரளவு நிவர்த்தி செய்தார். இவருடைய காலத்திலேயே பழைய மாணவர்கள் சிலரின் பங்களிப்புடன் தற்போது இருக்கின்ற பாடசாலையின் முன்வாயில் புதுப்பொலிவுபெற்றது.

இவருடையகாலம் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுப் போட்டிகளில் உச்சம் தொட்டகாலமாகும். ஒரு விளையாட்டு வீரரான இவர் இப்பாடசாலையை அபிவிருத்தி செய்வதில் பெரும் பங்காற்றினார். உடற்கல்வி ஆசிரியர் இல்லாதபோதிலும் ஒருசில ஆசிரியர்களின் உதவியுடன் முதல்முறையாக காலை, மாலை நேரங்களில் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கியதோடு அதன் பெறுபேறாக 2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் 5 பதக்கங்களுடன் 6 புள்ளிகள் மாத்திரம் பெற்ற இப்பாடசாலை 2013 இல் 29 பதக்கங்களுடன் 36 புள்ளிகளை பெற்று துரித வளர்ச்சியை ஏற்படுத்தியிருந்தார். இக்காலகட்டத்தில் உடற்கல்வி ஆசிரியர் நியமிக்கபட்டு அதே ஆண்டில் தேசியமட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் செல்வன்.பே.வேணுஜன் கோலூன்றிப்பாய்தலில் வர்ணச்சான்றிதழ் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. அதேபோல் 2014 ஆம் ஆண்டு 41 பதக்கங்களும் 70 புள்ளிகளையும், 2015 ஆம் ஆண்டு 55 பதக்கங்களும் 110 புள்ளிகளையும் பெற்றதோடு 2014, 2015ஆம் ஆண்டுகளில் பட்டிருப்பு கல்வி வலயம் மாகாணமட்டத்தில் முதலிடம் பெறுவதற்கு காரணமாவும் அமைந்தது. 2016 ஆம் ஆண்டில் செல்வன்.ஜெ.ரிசானன் அகில இலங்கை இளையோருக்கான தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் பரிதிவட்டம் வீசுதல் நிகழ்வில் கலந்துகொண்டு 2ஆம் இடத்தைப் பெற்றதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அதேபோல் அகில இலங்கை தமிழ்த்தினப்போட்டியிலும் தேசியமட்டத்தில் செல்வி.து.வுகாரி கவிதை ஆக்கத்தில் முதலாம் இடத்தினையும், செல்வி.க.ஹீப்ரதா பாவோதல் போட்டியில் மூன்றாம் இடங்களைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்காலகட்டத்தில் அகில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ரீதியாக நடைபெற்ற சமூகவிஞ்ஞானப் போட்டியிலும் பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

2012, 2013 ஆண்டுகளில் செல்வன்.பீ.வதீஸ்குமார் தேசிய ரீதியிலும் அகில இலங்கை ரீதியிலும் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். அதேபோல் 2013 ஆண்டில் செல்வன்.ந.இளந்தீபன் அகில இலங்கை ரீதியில் 2ஆம் இடத்தையும், 2015 ஆம் ஆண்டு செல்வன்.ஜெ.ரிசாணன் 1ஆம் இடத்தையும் பெற்றுக் கொடுத்தனர். மேலும் 2014ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் நடைபெற்ற தேசிய அரச நடன விழாவில் உழவர் நடனத்தில் எமது பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இவரது காலத்தில் இலங்கை கல்வியமைப்பில் புதியதொரு மாற்றம் இடம்பெற்றது. அதாவது உயர்தரப்பிரிவுப் பாடவிதானத்தில் தொழில்நுட்பப் பிரிவு அறிமுகமாகியது. மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் அவர்களது உதவியால் பட்டிருப்பு வலயத்தில் எமது பாடசாலை தொழில்நுட்பப் பிரிவுக்கான பாடசாலையாகத் தெரிவுசெய்யப்பட்டது. பொறியியல் தொழில்நுட்பம், உயிர்முறைத் தொழில்நுட்பம் ஆகிய இரு துறைகளும் அறிமுகம் செய்யப்பட்டு உயர்தர வகுப்புக்களுக்கு ஆறு துறைகளுடைய பாடசாலையாக மாற்றமடைந்ததோடு அக்காலத்தில் 1AB Super பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. 2012 ம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் தொழில்நுட்பப்பிரிவுக்கு அனுமதியளிக்கப்பட்டனர். அனுமதியளிக்கப்பட்டவர்களில் 58 பேர் சித்தியடைந்தனர். அதாவது NVQ மட்டம் பெற்றுக்கொண்டனர் . அதாவது தொழில்நுட்பவியல் டிப்ளோமாக் கல்விக்கு அவர்கள் தகைமை பெற்றனர். தொழில்நுட்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவர் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டது. இத் தொழிநுட்பப்பிரிவினால் அம்பாறை, மொனராகலை, பதுளை, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் இருந்து மாணவர்கள் இங்கு வருகைதந்து கல்விகற்று வருவதோடு, மட்டக்களப்பில் தொழிநுட்பப்பிரிவில் அதிக மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பும் ஒரு பாடசாலையாகவும் இப்பாடசாலை மிளிர்வது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கடந்த 2012 தொடக்கம் 2015 வரையான காலகட்டங்களில் புலமைப் பரிசில் பரீட்சை, சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை என்பனவற்றில் பாரிய அபிவிருத்தியை நோக்கமுடிகின்றது. க.பொ.த சாதாரண தரத்தில் சித்திபெற்று உயர்தரம் கற்கும் மாணவர் எண்ணிக்கை 62 வீதமாக உயர்வடைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடா வருடம் 25 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றார்கள். கடந்த வருடப் பரீட்சையில் உயிர்முறைமை தொழிநுட்பப் பிரிவு மாணவன் செல்வன்.கி.கிருஷ்ணானுரேதன் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமைதேடித்தந்தார். தொழிநுட்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மூன்று மாடி தொழில்நுட்பபீடம் பாரிய திட்டமிடலுடன் ஆரம்பமாகி இவருடைய காலத்திலேயே நிறைவுபெற்றது.

இவருடைய காலத்திலேயே பாடசாலைப் பசுமைப் பூந்தோட்டம் உருவாக்கப்பட்டு தற்போதும் அதன் கவின்நிலை பேணப்படுவது குறிப்பிடத்தக்கது. கிராம மக்களின் பங்களிப்புடன் வடக்கு தெற்கு சுற்றுமதில்கள் உயர்த்தப்பட்டதோடு கிழக்குப்பக்கம் முழுமையாக்கப்பட்டது. நல்லூரான் வேலு அவர்களின் ஞாபகார்த்தமாக அவருடைய புதல்வன் வைத்தியர் திரு.வே.இளங்கோவன் அவர்களால் சிற்றுண்டிச்சாலை ஒன்று அமைக்கப்பட்டது. இக்காலத்திலேயே நவீன மயப்படுத்தப்பட்ட மலசல கூடமும் அமைக்கப்பட்டது. இருமொழிக் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த 2015இல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. போதிய ஆசிரிய ஆளணியின்மையால் அது இடைநிறுத்தப்பட்டது. பாடசாலை அபிவிருத்தியின் ஓர் அம்சமான “அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை” எனும் திட்டம் இவருடைய காலத்திலேயே அறிமுகப் படுத்தப்பட்டது. திரு.சி.அலோசியஸ் அதிபர் அவர்கள் 2016.03.03 அன்று ஓய்வுபெற்றுச் சென்றதைத் தொடர்ந்து திரு.பெ.பேரின்பராசா சிரேஸ்ட ஆசிரியர் பதில் அதிபராக செயற்பட்டார்.

எமது பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக ஒரு கல்வி நிருவாக சேவையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் அதிபராக கடமையேற்ற வரலாறு 06.06.2016 அன்று நிகழ்ந்தது. எமது பாடசாலையின் பழைய மாணவரும் எமது கிராமத்தைச் சேர்ந்தவருமான திரு.பே.காப்தீபன் அவர்கள் மிக இளவயதில் அதிபர் பொறுப்பை ஏற்றார். இவர் திரு.சி.அலோசியஸ் அவர்கள் விட்டுச்சென்ற அபிவிருத்தியை மேம்படுத்தியதோடு சில புதிய மாற்றங்களையும் ஏற்படுத்தினார். அந்தவகையில் 20.06.2016 அன்று தொடக்கம் காலை ஒன்றுகூடல் நிகழ்வுகளில் ஒவ்வொரு திங்கட் கிழமைகளில் தேசியகீதம் இசைக்கும் வழமையை ஏற்படுத்தியமை, நடைபாதைகளுக்கு கற்களைப்பரப்பி செப்பனிட்டமை, அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின்கீழ் வகுப்பறைகளை திருத்தியமைத்தமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆயிரம் பாடசாலை கள் அபிவிருத்தி திட்டத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்ட தொழிநுட்ட ஆய்வுகூட திறப்புவிழா கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் கௌரவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. தண்டாயுதபாணி அவர்கள் கலந்து கொண்டு 12.07.2016 இல் திறந்து வைத்தார். இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ.ஞா.சிறிநேசன், கௌரவ.சீ.யோகேஸ்வரன் ஆகியோரும் அக்கால கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கௌரவ.கே.துரைராஜசிங்கம் அவர்களும் எனைய மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். எமது பாடசாலை வரலாற்றில் அதிபர் சேவை தரம் i ஐச் சேர்ந்த திரு.கே.நல்லதம்பி அவர்கள் பிரதி அதிபராக 03.08.2016 அன்று கடமையைப் பொறுப்பேற்றதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

2016 ஆம் கல்வி ஆண்டில் பல்வேறு இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளில் தேசிய ரீதியான பல வெற்றிகள் கிடைத்தன. 17.07.2016 அன்று கொழும்பு டீ.எஸ்.சேனாநாயக்க கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டியில் எமது மாணவர்கள் கனிஸ்ட பிரிவு-1 குழு நடனத்தில் முதலாமிடத்தைப் பெற்றனர். 18.10.2016 அன்று கண்டி வோகம்பறை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் செல்வன்.ஜெ.ரிசாணன் குண்டு தள்ளுதல் மற்றும் பரிதிவட்டம் வீசுதல் ஆகிய போட்டி நிகழ்வில் இரட்டைத் தங்கத்தை பெற்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவரது வெற்றியை ஊரே திரண்டு வரவேற்றுக் கொண்டாடியமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதே போட்டியில் நிகழ்வில் செல்வன். கெ. சந்திரகுமார் அவர்கள் கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் 7ஆம் இடத்தைப் பெற்று வர்ணச்சான்றிதழ் பெற்மையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதேபோல் 13.11.2016 அன்று கொழும்பு டீ.எஸ்.சேனாநாயக்க கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை சிங்கள மொழித்தினப் போட்டியில் செல்வி.சு.டிசானி பேச்சுப் போட்டியில் 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். சக்திவள தினத்தை முன்னிட்டு 31.12.2016 அன்று தேசிய ரீதியாக நடைபெற்ற நடைபெற்ற வீதி நாடகப்போட்டியில் பங்குபற்றிய எமது வித்தியாலய உயர்தரவகுப்பு மாணவர்கள் 2ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசியமட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் வெற்றிபெற்ற செல்வன்.தி.ஜனுஸ்கன் சர்வதேச ஒலிம்பியாட் போட்டிக்காக சிங்கப்பூர் சென்றமை இப்பாடசாலை வரலாற்றில் ஒரு முக்கிய மையிற்கல்லாகும்.

எமது பாடசாலை வரலாற்றில் அதிபர் தரத்தைச் சேரந்த இருவர் பிரதி அதிபர்களாக நியமிக்கப்பட்ட சந்தர்ப்பம் 01.02.2017 அன்று நடை பெற்றது. பாடசாலையின் பழைய மாணவரும் களுதாவளை கிராமத்தைச் சேர்ந்தவரு மாகிய திரு.செ.செந்தில்குமார் மற்றும் தேற்றாத்தீவைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த திருமதி.சு.சுரேஸ்குமார் ஆகியோர் தமது கடமையை பொறுப் பேற்றுக் கொண்டனர். 27.02.2017 அன்று எவரெஸ் சிகரம் ஏறிய முதலாவது இலங்கைப் பெண் ஜெயந்திக்குரு எமது பாடசாலைக்கு வருகைதந்து தனது அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்துகொண்டார். 20.07.2017 அன்று மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்ற மாகாணமட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் எமது பாடசாலை 16 தங்கப்பதக்கங்களையும், 13 வெள்ளிப்பதக்கங்களையும் மற்றும் 6 வெண்கலப்பதக்கங்களையும் பெற்று 137 புள்ளிகளுடன் சாதனை படைத்தது. 14.10.2017 கொழும்பு தியகம விளையாட்டரங்கில் நடைபெற்ற தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் செல்வன்.ஜெ.ரிசாணன் குண்டு தள்ளுதல் போட்டியில் 3ஆம் இடத்தைப்பெற்று மீண்டும் பாடசாலைக்கு பெருமையை தேடித்தந்தார்.

எமது பாடசாலை வரலாற்றில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் படையணி 11.10.2017 அன்று மாகாண மட்டத்தில் முதலாம் இடம்பெற்று ஜனாதிபதிக் கிண்ண தேசிய மட்ட போட்டிக்காக ரந்தம்பே இராணுவ பயிற்சிமுகாமுக்கு சென்று பங்குபற்றியிருந்தனர். 10.05.2018 அன்று தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மூன்று மாடிக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இதற்காக முன்னின்று உழைத்த மாவட்ட அரசாங்க அதிபர் திரு.மா. உதயகுமார், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு.ஆர்.இளஞ்செழியன், மாவட்ட பிரதம கணக்காளர் திரு.ச.நேசராசா, வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இக்கட்டிடம் நிதி ஒதுக்கீட்டுப் பிரச்சினை காரணமாக இரண்டு மாடிக்கட்டிடமாக மாற்றப்பட்டு தற்போதும் அதன் கட்டுமாணம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 24.07.2018 அன்று நடைபெற்ற மாகாணமட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் எமது பாடசாலை 13 தங்கப்பதக்கங்களையும், 13 வெள்ளிப்பதக்கங்களையும் மற்றும் 6 வெண்கலப்பதக்கங்களையும் பெற்று 123 புள்ளிகளுடன் மீண்டும் சாதனை படைத்தது.

அதிபராகக் கடமையாற்றிய திரு.பே.காப்தீபன் மட்டக்களப்பு கல்வி வலயத்திற்கு பிரதிக்கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து நிருவாகத்திற்கு பொறுப்பாக இருந்த பிரதி அதிபர் திரு.செ.செந்தில்குமார் அவர்கள் 03.10.2018 முதல் பதில் அதிபராகச் செயற்பட்டார். இவரது காலத்திலேயே அப்போதைய கல்வி இராஜங்க அமைச்சராக இருந்த கௌரவ திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்களிடம் பழைய மாணவர்கள் சிலரின் வேண்டுகோளின் அடிப்படையில் தேசிய பாடசாலையாக தரமுயர்த்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.01.2019 அன்று மாகாணப் பாடசாலையில் இருந்து தேசிய பாடசாலைக்கு விடுப்பதற்கான ஒழுங்குகள் கௌரவ அமைச்சரின் உதவியுடன் பதில் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் நேரடியாகச்சென்று மேற்கொண்டிருந்தனர். இதற்காக அக்காலத்து கௌரவ ஆளுனர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாணகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் உதவிகளை மேற்கொண்டிருந்தனர். பதில் அதிபர் திரு.செ.செந்தில்குமார் அவர்களின் தலைமையில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, தேசிய பாடசாலை தரமுயர்த்துதல், மூன்று மாடிக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டுதல், உள்ளக விளையாட்டு அரங்கு அமைத்தலுக்கான அடிக்கல் நாட்டுதல் மற்றும் நவீன மலசல கூடத்திற்கான அடிக்கல் நாட்டுதல் ஆகிய நிகழ்வுகள் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ விஜயகலா மகேஸ்வரன் அவர்களின் பங்குபற்றுதலுடன் 09.02.2019 இல் ஏற்பாடு செய்யபட்டிருந்தவேளை அதற்கு முதல் நாள் 08.02.2019 பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர்களின் விருப்புக்கு அமைய திரு.க.சத்தியமோகன் அவர்கள் புதிய அதிபராக கடமையை பொறுப்பேற்றுக் கொண்டபோதும் அவருடைய பெருந்தன்மை அடிப்படையில் நிகழ்வுகள் திரு.செ.செந்தில்குமார் பதில் அதிபர் தலைமையில் நடைபெற்றது. அரசியல் மாற்றம் காரணமாக தேசியபாடசாலை தரமுயர்த்தல் மற்றும் நவீன மலசலகூடத்தை தவிர ஏனைய அபிவிருத்திகள் தடைப்பட்டன.

எமது சகோதர கிராமமான களுவாஞ்சிகுடியைச் சேரந்த திரு.க.சத்தியமோகன் அவர்கள் பாடசாலைச் சமூகத்தின் பேரில் 08.02.2019 அன்று தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் 2009 தொடக்கம் இப்பாடசாலையில் அரசியல் விஞ்ஞானப் பாடத்தை கற்பித்துக் கொண்டிருந்தபோது இப்பாடசாலையிலேயே தனது அதிபர் தரத்தை பெற்றுக்கொண்டு பின்னர் மட்/குறுமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்தில் அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் இப்பாடசாலையை பொறுப்பேற்று சிலகாலத்தில் அதாவது 01.03.2019 அன்று முதல் இப்பாடசாலை உத்தியோகபூர்வமான ஓர் தேசியபாடசாலையாக அறிவிக்கப் பட்டது. இதற்கான சான்றிதழ் கடிதத்தினை அதிபர் உட்பட பாடசாலைச் சமூகத்தினர் கல்வி அமைச்சுக்கு சென்று பெற்றுவந்தனர். இது இப்பாடசாலை வரலாற்றில் புதியதொரு மைல்கல்லாகும்.

இவர் பொறுப்பேற்று படிப்படியாக மாற்றங்களை ஏற்படுத்திவருகிறார். இவருடைய ஆரம்ப காலம் ஈஸ்டர் குண்டுவெடிப்பு பயங்கரவாத தாக்குதல், Covid-19 போன்றவற்றால் பாதிக்கப்பட்டது. எமது பாடசாலையின் பிரதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்கள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆலயங்களின் நிர்வாக சபையினர் வலய கல்வி அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் சவால்களை எதிர்நோக்கி வெற்றி கண்டார். அதிலும் Covid-19 கால விடுமுறையில் எவ்வித பயிற்சியுமின்றி இருந்த ஆசிரியர்கள் Zoom, Whatsapp தொழில் நுட்பத்தினூடாக கற்பிக்க பழகிக் கொண்டனர்.

இவருடைய காலத்தில் ஒரு தேசிய பாடசாலையாக தரம் உயர்ந்தாலும் அதற்குரிய பௌதீகவளம், மனிதவளம், வகுப்பறை தட்டுப்பாடு போன்றன பெரும் சவாலாக காணப்பட்டது. தளபாடப் பற்றாக்குறை நிலவிய போது, எமது சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் பங்களிப்போடு எமது பாடசாலை அபிவிருத்தி சங்கத்தால் 400 தளபாடங்கள் திருத்தப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக கொடுக்கபட்டது. இதைவிட பாடசாலையின் முன்பக்க மதிலில் ஒரு பகுதி மாகாண கல்வி திணைக்களத்தின் நிதி பங்களிப்புடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, புதிய நுழைவாயிலும் திறக்கப்பட்டது. அத்தோடு வகுப்பறைத் தேவையை பூர்த்தி செய்ய அப்போதைய தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சினால் 18 வகுப்பறைகளைக் கொண்ட மூன்று மாடிக்கட்டடம் ஒன்றை 2019 பெற்று அடிக்கல் நாட்டப்பட்டு ஒப்பந்ததாரரின் தாமதத்தால் அந்நிதி மீள அனுப்பப்பட்டு ஒரு தளத்தினையும் பூர்த்தி செய்யாத குறைபாடுகளுடன் அக்கட்டிடம் காணப்பட்டபோது, பழைய மாணவர்களின் முயற்சியால் அதனை மீண்டும் உயிர்ப்பிக்க எடுத்த முயற்சியால் 12 வகுப்பறைகள் கொண்ட இருமாடிகளாக குறைக்கப்பட்டு வேலைகள் நடைபெற்ற போது, நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் தாமதமான அவ்வேலை மெல்ல மெல்ல இன்று வரை நகர்ந்துகிறது.

அதேபோல் பழைய மாணவர்களின் உதவியுடன் இயற்கையுடன் அமைந்த வெளியக வகுப்பறை, நீர் வழிந்தோடுவதற்கான கால்வாய் அமைப்பு மற்றும் ஒன்றுகூடல் மண்டபத்தைச் சுற்றி மண் நிரப்பி செப்பனிடல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவர் அதிபராக பொறுப்பேற்ற காலமான 2019ல் இருந்து நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மற்றும் சவால்களுக்கும் மத்தியில் மாணவர்களின் வீடு வீடாக சென்று கல்விப் பணியாற்றியிருந்ததோடு, எல்லோரின் ஒத்துழைப்புடன் பாடவிதானத்திலும், இணைப்பாட விதானத்திலும் பெரும் சாதனைகளை படைத்தனர். பாடவிதானத்தில் க.பொத சாதாரண தரத்தில் சித்தி பெற்று உயர் கல்வி கற்கும் மாணவர் எண்ணிக்கை முறையே 2018 இல் (76.23%)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததைவிட 2021 இல் (86.71% ) அதிகரித்துக் கொண்டு வருகிறது. அது மாத்திரமல்லாமல் இப்பாடசாலை வரலாற்றில் 2021 அதிகளவான மாணவர்கள் க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோன்றியதும் 9A பெற்றதும் (06 மாணவர்கள்) சித்தி வீதம் உயர்ந்ததையும் குறிப்பிடலாம்.

அதுபோல க.பொ.த உயர்தர பரீட்சையை பொறுத்தவரை 2018 இல் 75% ஆகவிருந்த சித்தி வீதம் 2021 இல் 76.56% ஆக அதிகரித்ததோடு, பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை பொறுத்தவரை அதன் மொத்தத்தொகை 20 தொடக்கம் 40 வரை காணப்பட்டதை முதல் முறையா அரைச் சதத்தினைக் கடந்தது. 2021ல் இதுவரை 51 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு இத்தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இத்தரவுகளின் அடிப்படையில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் அதிக மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய பாடசாலையாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்தாவது பாடசாலையாகவும் காணப்படுகின்றது.

அதிலும் குறிப்பாக 2020 உயர்தர பெறுபேற்றில் இப் பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக செல்வன். சற்குணம் கிஷாந்த் என்ற மாணவன் 3A சித்தி பெற்று மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். (மாவட்ட நிலை 16) அதுபோல ஒவ்வொரு ஆண்டும் தொழில்நுட்ப துறையில் இருந்து மாவட்ட நிலையில் முதல் 10 இடங்களில் பெருமளவு மாணவர்கள் இப் பாடசாலையில் இருந்தே தெரிவு செய்யப்படுகின்றனர். அதுபோல 2021 இல் க.பொ.த உயர்தர பரீட்சையில் இப்பாடசாலை மாணவி செல்வி. த. மிருணா கணித பிரிவில் 3A சித்தி பெற்று மாவட்டத்தில் மூன்றாம் நிலையில் பொறியியல் பீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்டார். அத்தோடு தொழில்நுட்ப பிரிவில் 2019 இல் செல்வன் கே.ரஞ்சன் மாவட்டத்தில் 2 ஆம் நிலையினையும் 2020 இல் செல்வன்.எம்.விஜீவன் 1 ஆம் நிலையினையும் செல்வன். ஜெ. கினுசன் 2 ஆம் நிலையினையும், செல்வி. எஸ். விஜிதா 3 ஆம் நிலையினையும், 2021 இல் செல்வி. ச. திஹாசினி ஆகியோர் மாவட்டமட்டத்தில் 2ஆம் நிலையினையும் பெற்றுக்கொண்டார்.

இவரது காலத்திலும் பாடவிதானத்தோடு மட்டும் சாதனைகள் நின்றுவிடாமல் இணைப்பாடவிதானத்திலும் அதிகசாதனைகள் படைக்கப்பட்டன. விளையாட்டுப் போட்டிகளைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களைப் போல் இருடைய காலத்திலும் சாதனைகள் தொடர்கின்றன. 2019 இல் எமது மாணவர்கள் இப்பாடசாலைக்கு மட்டுமல்ல எமது வலய,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டங்களுக்கும் பெருமை சேர்த்து வருகின்றனர். அந்த வகையில் மாகாண மட்ட விளையாட்டு போட்டியில் 2019 இல் பட்டிருப்பு கல்வி வலயம் 179 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடம் பெறுவதற்கு தனியொரு பாடசாலையாக எமது மாணவர்கள் 127 புள்ளிகளை பெற்றுக் கொடுத்து சாதனை நிலைநாட்டியதோடு, தேசிய ரீதியாகவும் மாணவர்கள் பங்குபற்றினர்.

அதன்பின் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தாதிருக்க கல்வி அமைச்சு தீர்மானித்தது. பின்னர் கடந்தவருடம் 2022ல் பல சவால்களுக்கு மத்தியிலும் எமது மாணவர்கள் முடங்கிவிடவில்லை என்பது போல மீண்டும் சாதனை பக்கங்களில் புதுப்பித்துக் கொண்டனர். அந்த வகையில் இம்முறை கிழக்கு மாகாண மட்டத்தில் புதிய சாதனைகளை எமது மாணவர்கள் ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் அதிகூடிய புள்ளிகளை பெற்று மாகாணத்தில் முதலாவது இடத்தை எமது பாடசாலை சாதித்தது. இந்த சாதனை எமது வலயம் முதலாம் இடம் பெறக்காரணமானது. இதில் முக்கியமான மற்றுமொரு விடயம் 11 விளையாட்டுகளில் எமது மாணவர்கள் மாகாண சாதனையை முறியடித்து புதிய சாதனைகளை படைத்துள்ளனர். அத்தோடு நீண்ட கால இடைவெளிக்குப்பின் எமது கூடை பந்தாட்ட அணியினர் மாகாணத்தில் மூன்றாம் இடம் பெற்று தேசிய ரீதியாக விளையாட தகுதி பெற்றனர். அந்த வகையில் இம்முறை தங்கம்-15, வெள்ளி-09, வெண்கலம்-08 பதக்கங்களுடன் வெற்றிவாகை சூடினர். சாதனைகள் அத்துடன் நின்று விடவில்லை. அது தேசிய ரீதியாகவும் வெளிவந்தது. இம்முறை தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தலில் இரண்டு மாணவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கல பதக்கங்களை சுபீகரித்தனர். அதில் செல்வன்.தி.டிலுக்சன் (20 வயது பிரிவு) மூன்றாம் இடம், செல்வன்.மே.கதுஷ்கர் (18 வயது பிரிவு) மூன்றாம் இடம் பெற்று சாதித்தனர். அது மட்டுமின்றி இன்னும் இரண்டு மாணவர்கள் தேசிய ரீதியாக நான்காம், ஆறாம் இடங்களை பெற்று கிழக்கு மாகாணத்திற்கு அதிக புள்ளிகளை பெற்றுக் கொடுத்தனர்.

இது மட்டுமல்லாமல் ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பல சாதனைகளை எமது மாணவர்கள் படைத்துள்ளனர். அகில இலங்கை தமிழ்மொழித்தின போட்டி மாகாண ரீதியாக 2022 இல் ஒரு முதலாம் இடமும், ஒரு இரண்டாம் இடமும் பெற்றதோடு தேசிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாக நடைபெற்ற தேசியமட்ட குறுநாடக ஆக்கப் போட்டியில் செல்வி.உ.சனாதனி முதலாம் இடத்தை பெற்று தங்கப்பதக்கத்தினையும் பெற்றுக்கொண்டார். மேலும் சமூக விஞ்ஞான போட்டியில் 2019 இல் ஒரு முதலாம் இடமும் ஒரு 3 ஆம் இடமும் கிடைத்தது. 2022 மாகாண மட்டத்தில் ஒரு மாணவர் முதலாம் இடத்தைப் பெற்றதோடு தேசிய ரீதியாக அவர் பங்குபற்றிய முடிவுகள் இதுவரை வெளியாகவில்லை.

கடந்தவருடம் கல்வி அமைச்சின் அழகியல் பிரிவால் நடத்தப்பட்ட நடனப் போட்டியில் மாகாண மட்டத்தில் ஒயிலாட்டம், உழவர் நடனம்,செம்பு நடனம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றி மூன்றிலும் முதலாம் இடத்தை பெற்றதோடு தேசிய மட்டப் போட்டியிலும் இம் மூன்று நிகழ்வுகளிலும் முதலாம் இடத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

2019 இல் நடைபெற்ற இதே போட்டி நிகழ்வில் இசை தனி நிகழ்வில் பங்குபற்றிய செல்வன். எஸ். அபிலாஸ், செல்வன். எஸ். சுகிர்தன் ஆகியோர் மாகாண மட்டத்தில் முதலாம் இடங்களையும், தேசிய ரீதியில் இரண்டு மாணவர்களும் மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டனர். கடந்த 2022 ஆம் கல்வியாண்டில் எமது பாடசாலை மாணவர்கள் 31 பேர் தேசியரீதியாக வெற்றிபெற்று பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

1871 ஆம் ஆண்டு மெதடிஸ்த மிசன் பாடசாலையாக தோற்றம் பெற்ற எமது பாடசாலை 01.01.1944 இல் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களைக் கொண்டு களுதாவளை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என அழைக்கப்பட்டதோடு, 1951ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி அரசினர் ஆங்கில கனிஷ்ட பாடசாலை என்ற பெயரிலும், பின்னர் களுதாவளை மகாவித்தியாலயம் என்ற பெயரிலும் உயர்வு பெற்று இப்போது மட்/பட்/களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலை என்ற நாமத்துடன் உயர்ந்து நிற்கின்றது. இதற்கான வராற்றுச் சான்றுகளை இன்றும் கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது பெருமைக்குரிய விடயமாகும்.

**பாடசாலைச் சமூகம்**
**மட்/பட்/களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர் பாராட்டு விழா – 2023, கௌரவிக்கப்படும் மாணவர்கள் விபரம்

க.பொ.த.(சா/தர)ப் பரீட்சை – 2020 இல் 9A பெற்ற மாணவர்கள் விபரம் :

1. T.Ridirsan
2. T.Aripradhap
3. K.Abinayah
4. P.Dayanika
5. R.Pilothmiya

க.பொ.த.(சா/தர)ப் பரீட்சை – 2021 இல் 9A பெற்ற மாணவர்கள் விபரம் :

1. T.Navaneeth
2. K.Thilothman
3. M.Abarna
4. E.Mithu
5. S.Dineska
6. U.Sanathani

**2019 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண மற்றும் தேசியமட்ட கர்நாடக சங்கீதப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம்**

| S.No | Student's Name | Event | Province | National |
|---|---|---|---|---|
| 1. | S.Apilash | Isai Thani | 1st | 3rd |
| 2. | S.Sukirthan | Vayalin Thani | 1st | 3rd |

**2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசியமட்ட ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றிய மாணவர் விபரம்**

| S.No | Student's Name | National Level | Grade |
|---|---|---|---|
| 1 | S.Eilahshanth | Participated | 7 |

**2019, 2022ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மாகாண, தேசிய மட்ட சமூகவிஞ்ஞான போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம்**

| S.No | Student's Name | Year | Province | National |
|---|---|---|---|---|
| 1 | T.Hiravunsan | 2019 | 1st | 6th |
| 2 | M.Abarna | 2019 | 3rd | - |
| 3 | S.Kamsithan | 2022 | 1st | Waiting |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த.(உ/தர)ப் பரீட்சை – 2019 இல் பரீட்சை எழுதி பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட மாணவர்கள் விபரம்

| S.N | Name | Stream | Result | Rank | Z-Score | Course - University |
|---|---|---|---|---|---|---|
| 01 | Y.Kokularaj | Bio. Science | B,C,S | 116 | 0.8057 | B.Sc Nursing(Hones) -University Of Peradeniya |
| 02 | K.Logeswaran | Commerce | 3A | 16 | 1.7069 | Management-University Of Peradeniya |
| 03 | J.Jenithan | Commerce | 2A,B | 55 | 1.4284 | Management-Eastern University |
| 04 | K.Panumathy | Commerce | 3A | 36 | 1.5391 | Management-Eastern University |
| 05 | J.Likirstha | Commerce | A,2B | 14 | 1.1624 | Management Studies (TV) -Trincomalee Campus |
| 06 | J.Ahalayan | Commerce | A,B,C | 113 | 1.1712 | Management-Eastern University |
| 07 | T.Sarintha | Commerce | 2A,B | 8 | 1.3115 | Management-Eastern University |
| 08 | V.Susmitha | Arts | A,B,C | 42 | 0.9345 | Arts-Eastern University |
| 09 | A.Sinoskkaran | Arts | A,2B | 15 | 1.2683 | Arts-Eastern University |
| 10 | K.Minoja | Arts | 2A,C | 104 | 1.3813 | Arts-Eastern University |
| 11 | M.Jeevika | Arts | 2A,C | 145 | 1.2543 | Arts-Eastern University |
| 12 | K.Kuganitha | Arts | A,B,C | 176 | 1.1757 | Arts-Eastern University |
| 13 | K.Mayoorika | Arts | 2B,C | 33 | 1.0328 | Arts-Eastern University |
| 14 | S.Tharmitha | Arts | A,B,C | 34 | 1.0148 | Arts-Eastern University |
| 15 | R.Sanchitha | Arts | 3B | 266 | 0.9963 | Drama & Theatre-Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 16 | K.Sasmitha | Arts | B,2C | 620 | 0.4539 | Music-Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 17 | S.Sajeetha | Arts | 2B,S | 531 | 0.5690 | Music-Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 18 | S.Tharshika | Arts | 2C,S | 864 | 0.0945 | Music-Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 19 | S.Sopija | Arts | 2C,S | 865 | 0.0988 | Visual & Technological Arts-Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 20 | P.Mithuja | Arts | B,2C | 101 | 0.6295 | Drama & Theatre-Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 21 | S.Apilash | Arts | A,B,S | 289 | 0.9601 | Music-Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 22 | K.Mirushka | Arts | A,B,C | 426 | 0.7209 | Dance -Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 23 | U.Thanushiya | Arts | A,2B | 151 | 1.2350 | Arts-Eastern University |
| 24 | T.Sinojan | Bio - Tec | A,2C | 20 | 1.3694 | Bio – Tec – Sabaragamuwa University |
| 25 | S.Vinojeevan | Bio - Tec | 2B,C | 29 | 1.2229 | Bio – Tec – Rajarata University |
| 26 | S.Kovarththan | Bio - Tec | 3C | 35 | 1.1520 | Bio – Tec – Eastern University |
| 27 | M.Mangala | Bio - Tec | B,C,S | 41 | 1.0196 | ICT - South Eastern University |
| 28 | M.Nilani | Bio - Tec | B,2C | 4 | 1.2536 | ICT - Uva Wellassa University |
| 29 | T.Mathumitha | Bio - Tec | 2C,S | 11 | 0.8925 | ICT - Uva Wellassa University |
| 30 | Y.Kanista | Bio - Tec | 3C | 7 | 1.1093 | Bio – Tec – South Eastern University |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 31 | S.Diniskaan | Bio - Tec | 3C | 9 | 1.0609 | Bio – Tec – Sabaragamuwa University |
| 32 | S.Nirrojan | E - Tec | 3B | 22 | 1.5507 | E – Tec - University Of Kelaniya |
| 33 | T.Umatharinie | E – Tec | A,2C | 26 | 1.3878 | E – Tec - South Eastern University |
| 34 | R.Vithushan | E – Tec | A.2C | 31 | 1.2195 | E – Tec - Sabaragamuwa University |
| 35 | K.Sanjeev | E – Tec | B,2C | 37 | 1.1586 | E – Tec - Sabaragamuwa University |
| 36 | S.Lakshithan | E – Tec | A,C,S | 70 | 0.6428 | Visual & Technological Arts-Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 37 | S.Akiles | E – Tec | 2B,S | 50 | 0.9745 | E – Tec - Wayamba University |
| 38 | G.Piratheep | E – Tec | B,2S | 98 | 0.3451 | Visual & Technological Arts-Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 39 | S.Robert | E – Tec | B,2C | 40 | 0.3451 | Visual & Technological Arts-Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 40 | K.Shanurchsan | E – Tec | B,2S | 120 | 0.1777 | Visual & Technological Arts-Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 41 | K.Ranjan | E – Tec | 3B | 2 | 1.9416 | E – Tec - University Of Colombo |
| 42 | S.Sharavanapavan | E - Tec | 2B,C | 4 | 1.6514 | E – Tec - Wayamba University |

## க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை – 2020 இல் பரீட்சை எழுதி பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட மாணவர்கள் விபரம்

| S.No | Name of the Student | Result | Rank | Stream | Z.Score | Course | University |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | S.Kishanth | 3A | 16 | Bio Science | 2.0037 | Medicine | University of Jaffna |
| 2 | V.Kovikanth | B,C,S | 148 | Physical Science | 0.6485 | Physical Science | South Eastern University |
| 3 | P.Dilaksika | C,2S | 334 | Bio Science | 0.1870 | Enviromental Conservation Management | Universitty of Kelaniya |
| 4 | K.Dilaksan | A,B,C | 99 | Commerce | 1.0766 | Management | University of Jaffna |
| 5 | P.Keerththana | 2A,C | 102 | Commerce | 1.0674 | Management | University of Jaffna |
| 6 | V.Mithuna | 2A,B | 91 | Arts | 1.5114 | Arts | Eastern University Sri Lanka |
| 7 | A.Pirunthika | A,2B | 98 | Arts | 1.4978 | Arts | Eastern University Sri Lanka |
| 8 | K.Apinayan | 2A,B | 182 | Arts | 1.3004 | Tourism and Hospitality Management | Rajarata University |
| 9 | R.Jinisda | 3B | 245 | Arts | 1.1981 | Arts | Eastern University Sri Lanka |
| 10 | K.Nilaxsan | 2B,C | 246 | Arts | 1.1956 | Arts | Eastern University Sri Lanka |
| 11 | T.Thusyanthini | 2A,B | 261 | Arts | 1.1751 | Arts | Eastern University Sri Lanka |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | T. Anuruththan | A,B,C | 263 | Arts | 1.1729 | Arts | Eastern University Sri Lanka |
| 13 | V.Lukuna | A,B,C | 270 | Arts | 1.1659 | Arts | Eastern University Sri Lanka |
| 14 | A.Lookitha | 3B | 283 | Arts | 1.1401 | Drama | Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 15 | U.Mekala | A,B,C | 293 | Arts | 1.1196 | Music | Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 16 | A.Kiruntha | A,2C | 592 | Arts | 0.709 | Music | Ramanathan Academy Of Fine Arts |
| 17 | J.Thajitha | 3S | 1981 | Arts | -0.8808 | Arts | Eastern University Sri Lanka |
| 18 | J.Kinushan | 3A | 2 | E-Tec | 2.7938 | E-Tec | University of Colombo |
| 19 | K.Kohisan | 2B,C | 17 | E-Tec | 1.5826 | E-Tec | Sabragamuwa University |
| 20 | U.Dilakshan | B,C,S | 35 | E-Tec | 1.1959 | E-Tec | Uvawellasa University |
| 21 | T.Larksanan | A,B,S | 39 | E-Tec | 1.1369 | Bio Medical Tec. | Gampaha Wickramarachchi University |
| 22 | K.Lakshan | 2C,S | 46 | E-Tec | 1.0478 | ICT | Vavuniya Campus |
| 23 | M.Vijeevan | 3A | 1 | Bio - Tec | 2.4455 | BST | University of Colombo |
| 24 | S.Vijitha | 3B | 3 | Bio - Tec | 2.0466 | BST | University of Sri Jayewardenapura |
| 25 | P.Kirushnaveni | A,B,C | 6 | Bio - Tec | 1.7988 | BST | University of Colombo |
| 26 | K.Sarmika | A,B,C | 8 | Bio - Tec | 1.6528 | BST | Sabragamuwa University |
| 27 | K.Abirami | B,2C | 21 | Bio - Tec | 1.2562 | BST | Eastern University Sri Lanka |
| 28 | T.Kishanthahi | B,2C | 23 | Bio - Tec | 1.166 | BST | University of Jaffna |
| 29 | S.Sarmila | 2B,C | 25 | Bio - Tec | 1.1402 | BST | Eastern University Sri Lanka |
| 30 | S.Kiuththika | 3C | 26 | Bio - Tec | 1.1215 | BST | Eastern University Sri Lanka |
| 31 | U.Rakshika | B,2C | 30 | Bio - Tec | 1.0935 | ICT | Vavuniya Campus |
| 32 | Y.Akshikka | B,2C | 53 | Bio - Tec | 0.8926 | Entepreneurship & Management | Uvawellasa University |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த.(உ/தர)ப் பரீட்சை – 2021 இல் பரீட்சை எழுதி பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட மாணவர்கள் விபரம்

| S.No | Name Of The Student | Result | Stream | Z.Score | Rank | Course | University |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | T.Miruna | 3 A | Physical Science | 2.4426 | 3 | Engineering | University Of Moratuwa |
| 2 | M.Puvanakopis | A,B,C | Physical Science | 1.3831 | 73 | Software Engineering | Sabragamuwa University |
| 3 | P.Kabilashini | A, 2b | Bio Science | 1.5892 | 94 | Pharmacy | University Of Sri Jayewardenapura |
| 4 | Y.Miruthviga | B,2c | Physical Science | 1.1046 | 99 | Computer Science | Trincomalee Campus |
| 5 | M.Apilashini | 3c | Physical Science | 0.7211 | 149 | Physical Science | University Of Jaffna |
| 6 | K.Adshaya | B,C,S | Physical Science | 0.6945 | 151 | Mineral Resources And Technology | Uva Wellasa University |
| 7 | P.Vithusha | B,C,S | Physical Science | 0.6169 | 158 | Applied Sciences | Trincomalee Campus |
| 8 | M.Pithushan | B. 2c | Bio Science | 0.9821 | 197 | Siddha Medicine And Surgery | University Of Jaffna |
| 9 | E.Ruhshiha | 3a | Commerce | 1.7007 | 29 | Management | Eastern University Sri Lanka |
| 10 | S. Liparsana | 3a | Commerce | 1.6632 | 34 | Management(Public) Honours | University Of Sri Jayewardenapura |
| 11 | L.Justin Jehu | 2a, B | Commerce | 1.4473 | 63 | Management | Eastern University Sri Lanka |
| 12 | R.Asvitha | 3a | Commerce | 1.4428 | 66 | Management | University Of Jaffna |
| 13 | R. Yanusha | 2a, B | Commerce | 1.2488 | 94 | Management | University Of Jaffna |
| 14 | P.Dushaliya | A 2b | Commerce | 1.24 | 96 | Management | University Of Jaffna |
| 15 | S.Tharsika | A, 2b | Commerce | 1.1497 | 120 | Management | University Of Jaffna |
| 16 | M.Niranchani | 2a, B | Commerce | 1.1444 | 121 | Management | Eastern University Sri Lanka |
| 17 | A.Jithukaran | A,B,C | Commerce | 1.0796 | 129 | Management | Eastern University Sri Lanka |
| 18 | A.Thuvanchali | A, 2b | Commerce | 1.0772 | 130 | Management | Eastern University Sri Lanka |
| 19 | R.Sharmila | A,B,C | Commerce | 1.0102 | 142 | Management | Eastern University Sri Lanka |
| 20 | S.Dinoska | 3b | Commerce | 0.9715 | 154 | Commerce | South Eastern University Sri Lanka |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 21 | S.Janujan | A,B,C | Arts | 1.4417 | 135 | Arts | South Eastern University Sri Lanka |
| 22 | M.Akshaya | A, 2b | Arts | 1.4115 | 146 | Communication Studies | Trincomalee Campus |
| 23 | V.Lojitha | A,B,C | Arts | 1.2614 | 220 | Arts | Eastern University Sri Lanka |
| 24 | T.Thevika | A,B,C | Arts | 1.0908 | 337 | Drama And Theatre | Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 25 | N.Yarvitha | A,B,C | Arts | 0.9798 | 414 | Visual And Technological Arts | Swami Vipulananda Institute Of Aesthetic Studies |
| 26 | S.Sivasanthuru | A, 2c | Arts | 0.8946 | 482 | Music | Ramanathan Academy Of Fine Arts |
| 27 | N.Hamsathvani | A, 2b | Arts | 0.6922 | 662 | Dance | Ramanathan Academy Of Fine Arts |
| 28 | M.Thanuskanth | A, 2b | Engineering Technology | 2.0042 | 5 | Engineering Technology (Et) | University Of Colombo |
| 29 | Y.Napithan | A, 2b | Engineering Technology | 1.9097 | 7 | Engineering Technology (Et) | University Of Kelaniya |
| 30 | Y.Sangarjisaran | A,B,C | Engineering Technology | 1.7174 | 13 | Engineering Technology (Et) | University Of Kelaniya |
| 31 | S.Sapesan | A,B,C | Engineering Technology | 1.5034 | 22 | Engineering Technology (Et) | Wayamba University |
| 32 | V.Sojakan | 2b,C | Engineering Technology | 1.4794 | 24 | Engineering Technology (Et) | Wayamba University |
| 33 | A.Thinopinth | A,B,C | Engineering Technology | 1.3953 | 28 | Engineering Technology (Et) | Sabaragamuwa University |
| 34 | R.Nethajee | 2b,C | Engineering Technology | 1.3637 | 30 | Engineering Technology (Et) | Wayamba University |
| 35 | S.Shapeesan | 2b,C | Engineering Technology | 1.3536 | 31 | Engineering Technology (Et) | Wayamba University |
| 36 | K. Thupeeshan | 2b,C | Engineering Technology | 1.3439 | 32 | Engineering Technology (Et) | Uva Wellassa University |
| 37 | T.Jeevatharsan | 2b,C | Engineering Technology | 1.3295 | 34 | Engineering Technology (Et) | Uva Wellassa University |
| 38 | T. Thushanth | B,2c | Engineering Technology | 1.3001 | 37 | Information Communication Technology | University Of Vavuniya |
| 39 | J.Danojan | 2b,C | Engineering Technology | 1.1729 | 48 | Engineering Technology (Et) | Uva Wellassa University |
| 40 | S. Vithushan | B,2c | Engineering | 1.1121 | 52 | Health Tourism And Hospitality | Gampaha Wickramarachchi Uni. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | Technology | | | Management | |
| 41 | A.Dilakshan | B,C,S | Engineering Technology | 0.5981 | 93 | Art And Design | Ramanathan Academy Of Fine Arts |
| 42 | S.Thigashini | 2a,B | Biosystems Technology | 2.3178 | 2 | Biosystems Technology (Bst) | University Of Sri Jayewardenepura |
| 43 | U.Vinothvipakar | A,B,C | Biosystems Technology | 1.9746 | 8 | Biosystems Technology (Bst) | University Of Colombo |
| 44 | S.Kirojan | 2a,B | Biosystems Technology | 1.9453 | 9 | Information Communication Technology | University Of Kelaniya |
| 45 | N.Linoprathap | A,2b | Biosystems Technology | 1.7269 | 12 | Biosystems Technology (Bst) | Rajarata University |
| 46 | J.Danusiyan | 2b,C | Biosystems Technology | 1.2234 | 23 | Biosystems Technology (Bst) | Rajarata University |
| 47 | P. Kirubajini | B,2c | Biosystems Technology | 1.181 | 28 | Biosystems Technology (Bst) | University Of Jaffna |
| 48 | J. Pirathiusha | 2b,C | Biosystems Technology | 1.1627 | 30 | Information Communication Technology | South Eastern University |
| 49 | S.Kisani | 2b,C | Biosystems Technology | 0.9996 | 38 | Biosystems Technology (Bst) | South Eastern University |
| 50 | G.Puspakanth | A,2c | Biosystems Technology | 0.9581 | 41 | Biosystems Technology (Bst) | University Of Jaffna |
| 51 | B.Ganiskan | B,2c | Biosystems Technology | 0.9185 | 43 | Biosystems Technology (Bst) | South Eastern University |

## 2019 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மாகாண மற்றும் தேசியமட்ட விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம்

| S.No | Competitors' Nam E | 2019 | | 2022 | | |
|---|---|---|---|---|---|---|
| | | Age group | Provincial Level Event's & Place | Age group . | Provincial Level Event's & Place | National Level Event's & Place |
| 01 | T.Dilujan | 18 | High jump ---- 1 | 20 | High jump ------- 1<br>110M Hurdles - 1<br>BASKET BALL --- 3 | High jump - -- 3 |
| 02 | M.Kathuskar | 16 | High jump - -- 1 | 18 | High jump - -- 1<br>4X100M ------ 3<br>Triple jump -- 3 | High jump - -- 3 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 03 | S.Therisan | 12 | 4X50M -------3<br>High jump ----3 | | | |
| 04 | J.Jeyaphinehas | 12 | 4x50M ------ 3 | | | |
| 05 | R.Kikasan | 12 | 4x50M ---------3 | | | |
| 06 | M.Sajivartha | 12 | 4x50M ------- 3 | | | |
| 07 | R.Mathusayan | 14 | High jump, -- 3 | 18 | 110M Hurdles --- 1<br>400M Hurdles----2<br>4X100M ------3 | |
| 08 | A.Vivanjan | 16 | 100M Hu ---- 2<br>4X400M ----- 2 | | | |
| 09 | K.Inthujan | 16 | 4X400M ------ 2 | | | |
| 10 | S.Danujan | | | 18 | Pole vault ---- 1<br>4X100M ------ 3 | |
| 11 | N.Sharmithan | | | 18 | 4X100M ------ 3 | |
| 12 | P.Thusmithan | | | 18 | Shot put ------- 3 | |
| 13 | N.Siranji | | | 18 | Discus Throw- 3 | |
| 14 | T.Losan | 16 | Javelin Throw-- 2<br>4X400M ------ 2 | 20 | Long jump --- 2<br>Pole vault ---- 2<br>4X400M ------ 2 | |
| 15 | J.Thushanth | 18 | 400M --------- 3<br>4X100M ------ 1<br>4X400M ------ 1 | 20 | 4X400M ------ 2 | |
| 16 | K.Elil | | | 20 | 4X400M ------ 2 | |
| 17 | M.Amsavar Than | | | 20 | 4X400M ------ 2 | |
| 18 | S.Vomisan | 16 | 4X400M ----- 2 | | | |
| 19 | K.Sopajithan | 18 | 800M --------- 2<br>400M Hurdles - 1<br>4X100M ------ 1<br>4X400M ------ 1 | | | |
| 20 | P.Mimosanan | 18 | 400M Hurdles - 3<br>4X100M ------ 1 | | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 4X400M ------ 1 | | | |
| 21 | P.Mithusan | 18 | 4X100M ----- 1<br>4X400M ----- 1 | | | |
| 22 | R.Kishon | 18 | Pole vault ---- 1 | 20 | Pole vault ---- 1 | |
| 23 | J.Rishanan | 18 | Shot put ------- 1<br>Discus Throw- 1 | | | |
| 24 | M.Manujan | 20 | Pole Vault ---- 3<br>4X400M ----- 2 | | | |
| 25 | K.Santhirakumar | 20 | Pole Vault ----- 1<br>4X400M -------- 2 | | | |
| 26 | T.Kirisman | 20 | 4X400M ------- 2 | | | |
| 27 | M.Pathusanan | 20 | 4X400M -------- 2 | | | |
| 28 | P.Vijayaraja | 20 | Javelin Throw -- 2<br>4X400M ------- 2 | | | |
| 29 | Y.Jakshan | | | 20 | BASKET BALL --- 3 | |
| 30 | J.Kajenthiran | | | 20 | BASKET BALL --- 3 | |
| 31 | T.Thishan | | | 20 | BASKET BALL --- 3 | |
| 32 | T.Thulakshanan | | | 20 | BASKET BALL --- 3 | |
| 33 | K.Sajeevan | | | 20 | BASKET BALL --- 3 | |
| 34 | A.Shakithyan | | | 20 | BASKET BALL --- 3 | |
| 35 | P.Vovithan | | | 20 | BASKET BALL --- 3 | |

| S.No | Competitors' Nam E | 2019 | | 2022 | | |
|---|---|---|---|---|---|---|
| | | Age group | Provincial Level Event's & Place | Age group . | Provincial Level Event's & Place | National Level Event's & Place |
| 36 | M.Thinojini | 12 | 60M, ---------- 2<br>100M, ------ 3<br>4x50M ------ 1 | 16 | 400M ------------1<br>4X400M ------- 2<br>4X100M ------ 3<br>Long jump ------ 3 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 37 | R.Mithustika | 12 | 4x50M ------ 1 | | | |
| 38 | K.Sapurthika | 12 | 4x50M ------ 1 | | | |
| 39 | S.Ritharsha | 12 | 4x50M ------ 1 | 16 | 4X400M --- 2<br>4X100M ------- 3 | |
| 40 | E.Sapilaksha | 14 | 80M Hurdles --3 | 16 | High jump -- 1<br>300M Hurdles -- 1<br>100M Hurdles -- 3<br>4X400M --- --- 2<br>4X100M -------- 3 | |
| 41 | M.Yukastika | | | | 4X400M --- 2<br>4X100M ------- 3 | |
| 42 | J.Kisharika | | | 16 | Shot Put ------- 1 | |
| 43 | T.Resmitha | 16 | 4X100M -----1<br>4X400M ----- 2 | 18 | 4X100M ------ 3 | |
| 44 | P.Adshaya | 16 | 100MHu ------ 2<br>High Jump --- 3<br>4X100M ------ 1<br>4X400M ------ 2 | 18 | High Jump --- 2<br>100M Hurdles --- 2<br>Triple Jump --- 2<br>4X100M ------ 3 | |
| 45 | P.Heenthiya | | | 18 | 4X100M ------ 3 | |
| 46 | S.Mithursika | | | 18 | 4X100M ------ 3 | |
| 47 | P.Rakshana | 16 | 300M Hu ----- 2<br>100M Hu, ---- 1<br>Long Jump ---2<br>4X100M ----- 1<br>4X400M --- 2 | 20 | Long Jump ----- 1<br>400M Hurdles--- 1<br>100M Hurdles-- 1<br>4X400M --- 1<br>4X100M ----- 2 | |
| 48 | R.Visomika | 16 | 4X100M ---- 1<br>4X400M ------ 2 | 20 | 4X400M --- 1<br>4X100M ----- 2 | |
| 49 | V.Danuska | 18 | High jump -- 1 | 20 | High jump -- 1<br>4X100M ----- 2<br>4X400M --- 1 | |
| 50 | S.Sivarajini | | | 20 | 4X400M --- 1 | |
| 51 | N.Kukanitha | | | 20 | 4X100M ----- 2 | |
| 52 | T.Thevika | 20 | 4X100M ----- 3 | | | |
| 53 | S.Sajimina | 20 | 4X100M ----- 3 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 54 | V.Apivarsha | 20 | 4X100M ----- 3 | | | |
| 55 | R.Jinistra | 20 | 4X100M ------3 | | | |

**2022 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண மற்றும் தேசியமட்ட தமிழ் மொழித் தினப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம்**

| NO | Name of Students | Events | District | Province | National |
|---|---|---|---|---|---|
| 1 | U.Sanathani | Kurunadaka Aakkam-(IV) | 1st | 1st | 1st |
| 2 | J.Yathuska | Pavothal – (IV) | 1st | 2nd | |

**2022 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண மற்றும் தேசியமட்ட அழகியல் போட்டிகளில் செம்பு நடனத்தில் வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம்**

| S.No | Student's Name | Province | National |
|---|---|---|---|
| 1 | T.Kirusrika | 1st | 1st |
| 2 | K.Nijalini | 1st | 1st |
| 3 | K.Apivarththany | 1st | 1st |
| 4 | S.Dinojika | 1st | 1st |
| 5 | R.Pathursana | 1st | 1st |
| 6 | K.Aarthy | 1st | 1st |
| 7 | J.Tharshana | 1st | 1st |
| 8 | E.Apilasiny | 1st | 1st |

**2022 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண மற்றும் தேசியமட்ட அழகியல் போட்டிகளில் உழவர் நடனத்தில் வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம்**

| S.No | Student's Name | Province | National |
|---|---|---|---|
| 1 | S.Yithurshan | 1st | 1st |
| 2 | T.Kishanan | 1st | 1st |
| 3 | M.Renujan | 1st | 1st |
| 4 | S.Sarvangan | 1st | 1st |
| 5 | V.Mishelsupijiksha | 1st | 1st |
| 6 | J.Ushaliny | 1st | 1st |
| 7 | S.Mithusdika | 1st | 1st |
| 8 | S. Dasmitha | 1st | 1st |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண மற்றும் தேசியமட்ட அழகியல் போட்டிகளில் ஒயில் நடனத்தில் வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம்

| S.No | Student's Name | Province | National |
|---|---|---|---|
| 1 | M.Kavinayan | 1st | 1st |
| 2 | P.Dilothman | 1st | 1st |
| 3 | K.Nijanan | 1st | 1st |
| 4 | K.Vithursan | 1st | 1st |
| 5 | Y.Rujitha | 1st | 1st |
| 6 | S.Thusmitha | 1st | 1st |
| 7 | V.Praveena | 1st | 1st |
| 8 | K.Mithusika | 1st | 1st |

### 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண மற்றும் தேசியமட்ட அழகியல் போட்டிகளில் பாடல் மற்றும் இசைக்கருவி இசைத்த மாணவர்கள் விபரம்

| S.No | Student's Name | Province | National |
|---|---|---|---|
| 1 | N.Hamsathvani - Singer | 1st | 1st |
| 2 | J.Praveen - Singer | 1st | 1st |
| 3 | S.Kishovarman - Instrument | 1st | 1st |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்றி நவிலல்...**

இந்நிகழ்வானது சிறப்பாக நடைபெற சகல வழிகளிலும் உறுதுணையாகவிருந்து ஆதரவும் ஆலோசனையும் நிதியும் வழங்கியவர்களுக்கும், கலந்து கொண்டு சிறப்பித்த அதிதிகள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அனுசரணை வழங்கியோர் :-

- களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலயம் - உபசரணை
- களுதாவளை சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயம் - அழைப்பிதழ்
- பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - பதக்கங்களும் நினைவுச் சின்னங்களும்
- பழையமாணவர் சங்கம் - சிறப்பு மலர், அலங்காரம், வீடியோ ஓடியோ சாதனங்கள் மற்றும் ஏனைய செலவுகள்.

பாடசாலைச் சமூகம்

மட் / பட் / களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாருதி அச்சகம், கலுதாவளை. 077 8842223, 075 3350995